வார இதழ்

# தேசியம்

THESIYAM ජෝසියම්

www.thesiyamnews.com

மலர்: 02 | | வள்ளுவர் ஆண்டு 2054 | 10.01.2024 - 17.01.2024 | ஊக்குவிப்பு: 80/=



WELLA HAIR DRESSING

வெலா சலூன்

Ladies & Gents

FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.

Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023




# விஜயகாந்த் வாழ்க்கை வரலாறு!

அரிசி ஆலை முதல் எதிர்க்கட்சித் தலைவர் வரை

பக்கம் 05



## புலம்பெயர் தேசங்களின் எழுச்சியின் மீதான ரணிலின் யுத்தமா!

பக்கம் 05



## தமிழீழ தேசியப் பிரச்சனை திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலே தீர்க்கப்பட வேண்டும்!

பிரதமர் விசுவநாதன் ருத்ரகுமார்

பக்கம் 05

## கேப்டன் விஜயகாந்துக்கு எம்.கே.சிவாஜிலிங்கம் அஞ்சலி!



பக்கம் 05


ROLEX HOTEL



360, Galle Road, Wellawatte,Colombo06. Tel: 011 2360462


ROLEX HOTEL

340, Hospital Road, Jaffna.

Tel: 021 2222808

E-mail: rolex.hotel@yahoo.com

தேசியம்
ஆசிரியர் பீடம்



தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

## தலை விதியைத் தீர்மானிக்கும் தலைமை?

1944 ஆகஸ்ட் 29ஆம் திகதி இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற ஒரே நோக்கத்தில் மூத்த தமிழ்த் தலைவரான ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தொடங்கப்பட்டது. 1945இல் அமைக்கப்பட சோல்பரி ஆணைக்குழுவின் முன், ஐம்பதுக்கு ஐம்பது சமபல பிரதிநிதித்துவம் கோரி இக்கட்சி வாதாடியது. எனினும் இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டம் தொடர்பான பிரச்சினையால் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டின் காரணமாக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து வெளியேறிய அணியினரால், 1949இல் மாவிட்டபுரத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி உருவாக்கப்பட்டது. இலங்கையில் ஒற்றையாட்சிக்குள் தமிழர் உரிமையுடன் வாழ முடியாது என்பது அக்கட்சியின் கூட்டாட்சிக் கோரிக்கையாக இருந்தது.

1956ஆம் ஆண்டுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்குக் கிழக்கில் பெரும்பான்மை இடங்களை வென்றது. அப்போது ஆட்சியைக் கைப்பற்றிய எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்தார். அதற்கெதிராக தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சி போராட்டங்களை அறிவித்து முன்னெடுத்தது. 1958இல் நடந்த இனக்கலவரத்தையடுத்து செல்வநாயகம், பண்டாரநாயக்கா இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு. அந்த ஒப்பந்தம் சிங்களவரின் கடும் எதிர்ப்பினால் கிழித்தெறியப்பட்டது.

இன ரீதியாக இந்த விடயங்கள் தமிழரசுக்கட்சிக்கு செல்வாக்கை அதிகரித்தது. இது 1960 மார்ச், 1960 ஜுன், 1965, 1970 ஆகிய தேர்தல்களிலும் பிரதிபலித்தது.1965 தேர்தலின்பின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து அமைச்சு பதவியைப் பெற்றுக் கொண்டது. ஆனால் அரசாங்கம் வாக்குறுதி நிறைவேற்றாமை தமிழரசுக்கட்சி விலகியது.

1970இல் நடந்த தேர்தல் சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் ஆட்சி சிறுபான்மையினருக்கெதிரான நிலைப்பாடுகளை கடுமையாக எடுத்தது. அதற்கெதிராக தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும் எடுத்த நடவடிக்கைகள் எதுவும் பயனற்றுப் போயின. ஆகவே அவ்வேளையில் தான் தமக்குள் உள்ள எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு ஒன்றிணையும் நிலைப்பாடு எடுக்கப்படுகிறது.

அதன் பயனாக, தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோர் கூட்டுத் தலைமைகளாகி தமிழர் விடுதலைக் கூட்டணி தாபிக்கப்படுகிறது. அதன் பின்னரான நடவடிக்கைகள் கூட்டணி சார்பிலேயே நடைபெற்று வந்திருந்தன.

சமஷ்டிக் கட்சி என அழைக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி 1972ஆம் ஆண்டுடன் கிடப்பில் போடப்பட்டது. ஆனால், 2004ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்ட முரண்பாடு அப்போதைய தலைவராக இருந்த வீ.ஆனந்தசங்கரி பிரிந்து செல்வதற்குக் காரணமானது. இதன் பின்னரே இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இதன் பின்னர் மீண்டும் தமிழர்களின் தலைமைக்கட்சி என்ற நிலையை எடுத்துக் கொள்வதற்காக கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டது. இப்போதைய நிலையில் தமிழர்களுடைய அரசியலுக்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலைந்து போவதற்கும் காரணமாகியிருக்கிறது.

இன்றைய நிலையில் மீண்டும் ஒரு தமிழ்த் தேசிய அரசியலுக்கான கூட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சூழ்நிலை ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்பு அல்லது சந்தர்ப்பம் உருவாகி வருகிறது. அது வேதுவுமல்ல தமிழரசுக் கட்சியின் தலைமைத் தெரிவேயாகும்.

இம்மாதம் நடைபெறவுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் அப்பதவிக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிடுகின்றர்.

இந்தப் போட்டியில் மொழி அறிவு குறிப்பாக ஆங்கிலம், சட்டப்புலமை என்பவைகளே பேசுபொருள்களாக காணப்படுகின்றனவே தவிர தமிழர்களின் அரசியல் முதன்மை பெறவில்லை என்பது மிகவும் கவலையானதொரு விடயமாகும். 1972கலில் தனித்தனியாகச் செயற்பட்ட கட்சிகளை இணைத்து தன்னுடைய கட்சியையும் கைவிட்டு தந்தை செல்வா தமிழ்த் தேசிய நலனுக்காக ஒரு முடிவை எடுத்திருந்தார். ஆனால், இப்போது நடைபெற்று வருகின்ற அரசியல் மிகவும் கவலையளிப்பதாக இருப்பதனைக் காணமுடிகிறது.

தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை எடுக்கக்கூடிய தமிழர்களின் பாரம்பரியமான, நீண்டகாலமாகப் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வை கௌரவத்துடன் பெற்றுத் தரக்கூடிய தொரு நிலைப்பாடுடையவர்களே தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் பொருத்தமானவர் என்பது தமிழ்த் தேசிய உணர்வுள்ள தமிழர்களின் கருத்தாகக் காணப்படுகிறது.

அதே நேரம் தமிழ் மக்கள் மீதான தேசிய உணர்வும் தேசிய விடுதலைக்கான வழி வரைபடத்தையும் சரியாக கொண்டு செல்லக் கூடிய ஒருவரே அதற்குப் பொருத்தமானவராக இருப்பார். தந்தை செல்வா,ஜி.ஜி.பொன்னம்பலம், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். போன்றோரின் காலத்தில் நாங்கள் விடுதலை பெற்றிருக்க வேண்டும். மொழி அறிவு, சட்டப்புலமை மாத்திரம் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தராது. மக்களை வழிநடத்துவதற்கு தைரியமும், இனம் ரீதியான சிந்தனையும் இருந்தால் அது ஒரு தலைமைத்துவமாக அமையும் என்று மட்டக்களப்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வெளியிட்ட கருத்து முற்றிலும் சரியானதே.

தனது அரசியல் பயணத்தில் பிறழ்வுகள் இல்லாத, தமிழர்களின் அரசியல் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தாத அல்லது கௌரவ நிலைக்குக் கொண்டு செல்லாத தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கான வழி வரைபடத்தையும் சரியாக முன்கொண்டு நகர்த்தக் கூடியவர் யார் என்பதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள் புரிந்து கொள்வதும் முடிவு செய்வதும் முக்கியமாகும். ஆரம்பிக்கப்பட்டதும், போராடியதும், முண்டு பிடித்ததும், முரண்பட்டதும், தமிழ் மக்களின் தேசிய அரசியல் நலனைக் கருத்தில் கொண்டு கிடப்பில் போட்டதும் எதற்காக என்பதனை புரிந்து கொள்ளாதவரையில் இது சாத்தியப்படப் போவதில்லை. அத்துடன், இந்த இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கமும் பிளவும் மீள் ஒன்றிணைவும் ஒருமித்த தமிழ்த் தேசிய அரசியல் வேலைத் திட்டமும் ஒவ்வொருவருக்கும் நினைவிலிருக்கட்டும்.

## விடுதலை புலிகளின் காலத்தில் அடக்குமுறைகள் இல்லை! து.ரவிகரன்!




விடுதலைபுலிகளின் காலத்தில் அடக்குமுறைகள் இருக்கவில்லை என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீதான பொலிசாரின் அடாவடித்தனத்தை கண்டித்தும், வவுனியா மாவட்ட தலைவி விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரி முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளால் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று கடந்த (08.01.2024) அன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அவர்கள் வடக்கிற்கான விஜயத்தினை மேற்கொண்டு வரும்போது வவுனியா , முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் வவுனியாவில் இடம்பெற்றிருந்தது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள் இணைந்து அந்தந்த மாவட்டங்களில் நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு போராட்டம் நடாத்தியிருந்தார்கள். அதில் இரு பெண்களை கைது செய்து சிறையில் அடைத்து வைத்திருக்கின்றார்கள்.

ஜனாதிபதி அவர்கள் தேர்தல் நடவடிக்கைக்காக வருவதென்றால் தேர்தல் நடவடிக்கைக்காக வந்து பிரச்சாரத்தை செய்தால் அது வேறு, ஆனால் நீதியை நிலைநாட்டாமல் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் விடயத்தில் மட்டுமல்ல நில அபகரிப்பு, கடலில் மீன்பிடித்தல், சகல தீர்வுதிட்ட விடயங்களிலும் அவர்களுக்கான தீர்வினை வழங்காமல் ஜனாதிபதி என்ற பேரில் இங்கு வந்து சிரித்து கொண்டு புகைப்படம் எடுப்பதற்காகவே யாழ்ப்பாணம், வன்னிக்கு வருகிறீர்கள் என்றால் நாட்டை எவ்வாறு நடத்துகிறீர்கள் என்பதனை யோசித்து பாருங்கள்.

பொருளாதார பிரச்சினையால் மக்கள் பட்டினி கிடக்கின்றார்கள் நாடு சின்னாபின்னமாகி இருக்கின்றது. 2009 மௌனித்த யுத்தம் 16 ஆண்டுகள் கடந்தும் மக்களுக்கான தீர்வுகள் இதுவரை வழங்கப்படவில்லை. தீர்வுகளை வழங்கி விட்டு இங்கு வந்து போட்டோக்கு போஸ் கொடுங்கள்.

ஜெனிற்றா அவர்களுக்கு விடுதலை வேண்டும் பொலிஸாரின் அராஜகம் என இவர்கள் சொன்னது உண்மை, பொலிஸார் மேலிடத்து உத்தரவால் அடக்கு முறையாக செயற்படுகின்றார்கள்.

**"விடுதலைபுலிகளின் காலத்தில் இவ்வாறு அடக்குமுறைகள் இல்லை. எங்களுடைய நிலங்கள், மதங்கள், கடல்கள் காப்பாற்றப்பட்டது. தீர்வுதிட்டங்கள் என்று கூறி ஏற்றுக் கொண்டதே தவிர இன்று அரசாங்கம் நடந்து கொண்டிருப்பதனை உலக நாடுகள் கண்காணித்து எங்களுக்கான தீர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்வினை முன்வைக்க வேண்டும் என கேட்டு கொள்கின்றேன் என மேலும் தெரிவித்தார்"**

# வடக்கு வருகை மூலம் ஜனாதிபதியின் பலவீனத்தை தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர்!

## ரெலோ யாழ் மாவட்ட அமைப்பாளர் சபா குகதாஸ்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தின் மூலம் தான் கலந்து கொண்ட நிகழ்வுகளில் அவரது அறிவிப்புக்கள் ஜனாதிபதியின் இயலாமையையும், பலவீனத்தையும் வெளிப் படுத்தியது மாத்திரமல்ல அவர் தனது தந்திரம் என நினைக்கும் காலம் கடத்தும் பொய்களையும் தமிழ் மக்கள் நன்றாக உணர்ந்து விட்டனர். ரணில் விக்கிரமசிங்க நினைக் கலாம் தனது எதிர்கால தேர்தலுக்கான ஆதரவுத் தளத்தை வலுப்படுத்தும் என. ஆனால் உண்மை அதுவல்ல நாட்டு மக்கள் முட்டாள்கள் அல்ல தொடர்ச்சியான ரணில் விக்கிரமசிங்கவின் அதிகப்பிரசிங்கித் தனம் ஜனாதிபதியின் இயலாமையை தோலுரித் துக் காட்டுகின்றது.

தமிழ் மக்கள் அரசியல் தெரியாதவர்கள் என நினைத்து காதில் பூச்சுற்றும் கதைகளை மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் கூறி யுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலய காணிகளை விடுப்பதற்கு ஜனாதிபதி கபினட்டில் தீர்மானம் எடுத்த பின்னர் தான் நடவடிக்கை எடுக்க முடியும் ஆனால் அப்படியான தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் மாவட்ட அதிகாரி களை பார்த்து நீங்கள் தான் விரைந்து அடுத்த ஆண்டிற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியமை பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றும் செயல்.

பொருளாதார வளர்ச்சிக்கு மத நல்லிணக்கம் மிக அவசியமென கூறியது மிகவும் வேடிக் கையான விடையம் காரணம் நாட்டின் உள்ள அத்தனை துறைகளுக்குமான நல்லிணக்கம் இன நல்லிணக்கம் மூலமே நிலை யானதாக ஏற்படும் என்ற உண்மை தெரிந் தும் தமிழரின் இனப்பிரச்சினை விவகாரத் தைப் பற்றி கதைப்பதை தவிர்ப்பதற்காக மத நல்லிணக்கத்தை பேசியுள்ளார் ஆனால்



ஜனாதிபதி வடக்கில் மத நல்லிணக்கம் பற்றி பேசும் சம நேரம் கிழக்கில் மூதூரில் ராஜ வந்தான் மலையில் தமிழ் மக்களின் எதிர்ப் பின் மத்தியில் பாரிய புத்தர்சிலை வைக்கப் படுகிறது பேச்சளவில் நல்லிணக்கம் செயலில் மத ஆக்கிரமிப்பு.

இலங்கை ஒரு சிவபூமி, பழைமை வாய்ந்த மதம் இந்துமதம் போன்ற கருத்துக்களை ஜனாதிபதி கூறியதை நாம் வரவேற்கின் றோம்.

இவ்வாறு கருத்துக் கூறும் ஜனாதிபதியால் திருக்கோணேசர் ஆலயம் மற்றும் திருக் கேதீஸ்வரம் போன்ற தொன்மை வாய்ந்த சிவபூமிகளை புனிதப் பிரதேசமாக அறிவிக்க முடியுமா?

பதின்மூன்றாம் திருத்தம் மாகாண அபி விருத்திக்கு மாகாணசபைகளுக்கு போதுமா னது என தெரிவித்த ஜனாதிபதி கடந்த மாதங்களில் தமிழ்க் கட்சிகளை சந்திக்கும் போது பதின் மூன்றாம் திருத்ததை அமுல்ப் படுத்த பாராளுமன்றத்தின் அனுமதி தேவை அதே நேரம் நான் பொலிஸ் அதிகாரம் தரமாட்டேன் எனக் கூறியவர் அதனை மறந்து பித்தலாட்டம் போடுகிறார்.

ஜனாதிபதியின் இயலாமையை வடக்கு மாகாண வருகையின் போது அவரது வாய்மூல அறிக்கைகள் தமிழ் மக்களை உணர வைத்துள்ளது.

# ஈழத்தமிழர்களின் குரலாக விளங்கியவர் விஜயகாந்த்!

## சிறீதரன் எம்.பி. இரங்கல்!



ஈழத்தமிழர்களுக்கும், அவர்களது போராட் டத்துக்கும் உளமார வலுச்சேர்த்த ஒருவராக விஜயகாந்த் திகழ்ந்தவர் என்பதுடன் தமிழின விடுதலைப் போராட்டத்தையும், தமிழினத்தலைவர் பிரபாகரனையும் ஆழ நேசித்தவர். இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி நகர வட்டாரக் கிளையினரது ஏற்பாட்டில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

எங்கள் போராட்டத்துக்கு வலுச்சேர்ப் பதற்காக தென்னிந்தியத் திரையுலகின் போக்கையே எமக்குச் சாதகமானதாக மடைமாற்ற முயன்று அதில் வெற்றியும் கண்டவராக விஜயகாந்த்திகழ்ந்தார். தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராக அவர் இருந்தபோது, தமிழின விடுதலைப் போரை ஆதரித்து அவர்நடத்திய உண்ணா விரதப் போராட்டம். விடுதலைப் போராட் டத்துக்கான நிதி சேகரிப்பு என்பவையும் தமிழக வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராதவை- என்றார்.

# இனப்பிரச்சினைத் தீர்வே நாட்டின் மீட்சிக்கு வழி!

## முன்னாள் சபாநாயகர் வலியுறுத்து!



தேசிய சிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டால் மாத்திரமே இலங்கையால் ஒரு நாடாக மு முன்னோக்கிச் செல்லமுடியும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான

தேசிய சிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டால் மாத்திரமே இலங்கையால் ஒரு நாடாக மு முன்னோக்கிச் செல்லமுடியும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டிலுள்ள பிரச்சினைகளில், தமிழ் மற்றும் சிங்கள இனங்களுக் கிடையில் நம்பிக்கை இன்மை என்பது பிரதான பிரச்சினையாகும். அதைத் தீர்க்கும்வரை ஒரு நாடாக எம்மால் முன்நோக்கிச் செல்ல முடி யாது.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் மட்டும் தீர்வு காண முடியாது. அவ்வாறு செய்ய முற்பட்டால் பல.

நல்லாட்சிக் காலத்திலும் புதிய அரசமைப்பை இயற்ற முயற்சி எடுக்கப்பட்டது. எனினும், குறுகிய அரசியல் நோக்கம், இனவாதக் கருத்து களால் அந்த முயற்சியும் கைகூட வில்லை.

# மக்களின் வரிப் பணத்தை வீணடித்துள்ள ஜனாதிபதியின் வடக்கு மாகாண விஜயம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெந்தி தெரிவிப்பு

ஜனாதிபதியின் வடக்கு விஜயம், மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாத மக்களின் வரிப் பணத்தை வீணடித்த வெற்றுப் பயணமாக வே அமைந் துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெந்தி இவ்வாறு தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் கட்சி தலைமைய கத்தில் நேற்று (06) சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் அடிப்படை வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யப் படாத நிலையில் உள்ளன. இந்த நெருக்கடி நிலையிலேயே மக்கள் வாழ்ந்து கொண்டி ருக்கின்றனர்.

காணி விடுவிப்பு, மீள்கட்டுமானம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, மற்றும் அரசியல் பிரச்சினைக் கான தீர்வு என்று தமிழ் மக்கள் பல்வேறு கோரிக்கை களை முன்வைத்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த ஜனா

திபதி ரணில் விக்ரமசிங்க ஒரு துண்டு காணியையேனும் அந்த மக்களுக்கு விடு வித்துக் கொடுக்கவில்லை.

நான் கொழும்பிலிருந்து வருகை தரும் போது வடக்கு அதிகாரிகள் சில ருடன் கதைத் தேன். ஜனாதிபதி விஜயம் எவ்வாறு இருந் தது என்று அவர்கள் கூறினார்கள். வாகனப் பவனியைக் கண்டு இரசித்தனர் என்று




கூறினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வின் யாழ். விஜயத்தை எதிர்த்து யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகா மையில் போராட்டம் நடைபெற்றது. ஜனநாயக வழியில் தமது எதிர்ப்பை தெரிவித்த போராட்டக்காரர்களைப் பொலிஸார் இழுத்துச் சென்றதையும் தாக்குதலுக்கு தயாராக இருந்த பொலிஸா ரையும் ஊடகங்களில் ஊடா கப் பார்த்தேன்.

நாட்டை அதல பாதாளத்துக்குக் கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி கதிரையில் இருந்து மக்கள் விரட்டியடித்த போது ரணில் விக்கி ரமசிங்க பின் கதவால் ஜனாதிபதியா னார். நாட்டை முன்னேற்ற போகிறேன் எனக் கூறிக்கொண்டு நாட்டு வளங் களை வெளிநாடுகளுக்குத் தாரை வார்க்கும் செயற்பாட்டில் ரணில் விக்கிரமசிங்காக

ஈடுபட்டு வருகிறார். நாட்டை பாதுகாப்பதற் காக பொது

மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள். சிவில் அமைப்பினர் மேற்கொள்ளும் போராட டங்களை பாதுகாப்பு தரப்பினர் மூலம் அடக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரு கிறார். எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என அரசியல் அமைப்பு கூறு கின்றது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி கதிரை யில் மீண்டும் அமர்வதற்காகத் தமிழ் மக்க ளின் வாக்குகளைப் பெறுவதற்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காது வடக் குக்கு சுற்றுப் பயணம் மேற்கொண் டுள்ளார்.

வட மாகாணத்தின் வளம் மிக்க பகுதிகளான மன்னார், பூநகரி, தீவ கம் போன்ற பகுதிகள் வெளிநாடுக ளுக்கு விற்பனை செய்யப்பட்டு இருக்கும் நிலையில் அந்தப் பிரதேச மக்க ளின் கோரிக்கைக்கு ஜனாதிபதி பதிலளிக்க வில்லை. நாடு பொருளாதார ரீதியில் பின் னோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில் ஜனாதிபதி ஆடம்பரமாக வாகன தொடரணிகள் சகிதம் வருகை தந்து நான்கு நாள்கள் வடக்கில் முகா மிட்டமை மக்களின் பிரச்சினையை தீர்க்க அல்ல. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரச்சாரமே இது.- என்றார்.

# கிளிநொச்சியில் வாக்காளர் பதிவு!



நாட்டின் சகல பிரதேசங்களிலும் வாக்காளர் விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அனைத்து கிராமஅலுவலர் பிரிவுகளிலும் வாக்காளர் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது . புதிதாக 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களும் வாக்காளர்களாக இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர். கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று இந்தப் பதிவுகளை முன்னெடுத்துள்ளனர் .

# 2024 வரலாற்றின் மிகப் பெரிய தேர்தல் வருடம்!

## மலர்ந்துள்ள 2024 ஆம் ஆண்டு மிகப்பெரிய தேர்தல் வருடம் என வர்ணிக்கப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் உலகின் பல நாடுகளில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. எனினும் இவ்வருடமானது 5 தெற்காசிய நாடுகள், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உட்பட சுமார் 76 நாடுகளில் இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல்கள் அல்லது முக்கிய சர்வஜன வாக்கெடுப்புகள் நடைபெறவுள்ளன.

இந்நாடுகளில் சுமார் 420 கோடி மக்கள் வசிக்கின்றனர். இந்த எண்ணிக்கை உலக மக்கள் தொகையின் அரைவாசிக்கும் அதிகமாகும்.

200 கோடிக்கும் அதிக எண்ணிக்கையான மக்கள் இத் தேர்தல்களில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

### 5 தெற்காசிய நாடுகளில்...

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டிலேயே ஆகக் கூடுதலான தேர்தல்கள் நடை பெறவுள்ளன. 5 தெற்காசிய நாடுகளில்...

தெற்காசியாவின் 8 நாடுகளில், இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், பூட்டான் ஆகிய 5 நாடுகளில் இவ்வருடம் முக்கிய தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இவ்வருடத்தின் முதலாவது தேர்தலாக பங்களாதேஷின் பாராளுமன்றத் தேர்தல் கடந்த (ஜனவரி 7 ஆம் திகதி) நடைபெற்றது.

முன்னாள் பிரதமர் பேகம் காலிதா ஸியா, ஊழல் குற்றச்சாட்டு காரணமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசிய கட்சி இத்தேர்தலை பகிஷ்கரிக்கிறது. இதனால், பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமிலீக் கட்சி தொடர்ந்து 4 ஆவது தடவையாக ஆட்சியில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி 9 ஆம் திகதி பூட்டானில் இரண்டாவது சுற்று பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போதைய பிரதமரான டாக்டர் லோதே ஷெரிங் ஏற்கெனவே முதற்சுற்றுத் தேர்தலில் தோல்வியடைந்ததால் போட்டியிலிருந்து வெளியேறிவிட்டார்.

பாகிஸ்தானில் பெப்ரவரி 8 ஆம் திகதி பாராளுமன்ற
பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் இம்ரான் கான் உட்பட அவரின் பி.ரி.ஐ. கட்சித் தலைவர்கள்
பலர் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் இத்தேர்தலுக்கான பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன.

கோஹர் அலி கான் தலைமையிலான பிரிஜ முன்னாள் பிரதமர் நாவஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி ஸர்தாரி ஆகியோரின் மகனான பிலாவல் பூட்டோ ஸர்தாரி தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகியன இத்தேர்தலில் பிரதான கட்சிகளாக உள்ளன.

இந்தியாவில் இவ்வருடம் பாராளுமன்ற லோக் சபாவுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இத்தேர்தலுக்கு இன்னும் திகதி குறிக்கப்படவில்லை.

தற்போதைய 17 ஆவது லோக்சபாவின் ஆயுட்காலம் ஜூன் 16 ஆம் திகதியுடன் முடிவடைகிறது இந்நிலையில் எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் இத்தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*** 420 கோடி மக்கள் வசிக்கும் 76 நாடுகளில் இவ்வருடம் தேர்தல்கள்.**
*** 200 கோடிக்கும் அதிகமானோர்களு வாக்களிப்பதற்குத் தகுதி.**
*** 5க்கு தெற்காசிய நாடுகளிலும் தேர்தல்கள்.**

தொடர்ச்சியாக 3 ஆவது பாராளுமன்றத் தேர்தல்வெற்றியை பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி (பி.ஜே.பி) எதிர்பார்க்கிறது. இக்கட சியை எதிர்கொள்வதற்காக எதிர்க்கட்சிகள் இண்டியா எனும் பாரிய கூட்டணியை அமைத்துள்ளன.

140 கோடி மக்களுடன் உலகின் ஆகக்கூடுதலான சனத் தொகையைக் கொண்ட நாடான இந்தியாவில், 90 கோடிக்கும் அதிகமான பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். இதனால் உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் என இந்தியா வர்ணிக்கப்படுகிறது.

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் எதிர்வரும் நவம்பருடன் முடிவடைகிறது. எனவே அதற்குமுன் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்பும் உள்ளதாக கருதப்படுகிறது.

தெற்காசியாவுக்கு வெளியே ஜனவரி 13 ஆம் திகதி தாய்வானில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

பெப்ரவரி 14 ஆம் திகதி இந்தோனேஷியாவில் ஜனாதி பதித்தேர்தல் நடைபெறவுள்ளது. 20.4 கோடிக்கும் அதிகமான மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் மக்களின் நேரடி வாக்குகளால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் முறையில் உலகின் மிகப்பெரிய தேர்தல் இதுவாகும்.

2 ஆவது தடவையாக ஜனாதிபதியாக பதவி வகிக்கும் தற்போதைய ஜனாதிபதி ஜோகோ விடாடோ மீண்டும் போட்டியிட முடியாது இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சர் பிரபோவோ சுபியான்டோ. மத்திய ஜாவா ஆளுநர் கஞ்சார் பிரனோவோ, முன்னாள் ஜகார்த்தா ஆளுநர் அனீஸ் பஸ்வேதான் ஆகியோர் இத்தேர்தலின் பிரதான போட்டியாளர்களாக உள்ளனர்.

மார்ச் முதலாம் திகதி ஈரானிய பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

ஏப்ரல் மாதம் தென்கொரியாவின் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் தென்கொரிய ஜனாதிபதியாக யூன் சுக் யோல் பதவியேற்றார் ஆனால், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டுள்ளதால் அவரால் சட்டங்களை நிறைவேற்ற முடியாமல் உள்ளது. இதனால் இத்தேர்தல் ஜனாதிபதியூனுக்கு மிகமுக்கிய மானதாகும்.

### ஐரோப்பாவில்

மார்ச் 15 முதல் 17 வரை ரஷ்யாவின் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் 5 ஆவது தடவையாக அப்பதவியைக்கைப்பற்றுவதற்கு நமி போட்டியிடுகிறார் அவருடன் மேலும் 14 பேர் போட்டியி டுகின்றனர். எனினும் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான அலெக்ஸி நவெல்னி கிரிமினல் குற்றச்சாட்டு காரணமாக
சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் இத்தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளான போர்த்துகல், பெல்ஜியத்தில் முறையே மார்ச், ஜூன் 9 ஆம் திகதிகளில் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

அத்துடன், ஜூன் 6 முதல் 9 ஆம் திகதிவரை ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 27 நாடு களிலுள்ள மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் பிரிந்த பின்னர் (பிரெக்ஸிட்) நடைபெறும் முதலாவது ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் இது 720 ஆசனங்களுக்காக இத்தேர்தல் நடைபெறவுள்ளது. 40 கோடிக்கும் அதிக எண்ணிக்கையான மக்கள் இத்தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடனிடம் தோல்வியுற்றத்தை ஒப்புக் கொள்ள மறுக்கும்
முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இருமுறை மீண்டும் போட்டியிட முயற்சிக்கிறார் ஏற்கெனவே இரு 2 மாநிலங்கள் அவர் போட்டியிடுவதற்கு தடை விதித்துள் என அமெரிக்காவின் பிரதான கட்சிகளான ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சியின் வேட்பாளரை தெரிவு 5 செய்வதற்கான மாநிலங்கள் ரீதியான உட்கட்சித் தேர்தல்கள் ஜனவரி 23 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன. பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையின் அனைத்து (435) ஆசனங்களுக்கும், 100 பேர் கொண்ட செனட் சபையின் 34 ஆசனங்களுக்கும் நவம்பர் 5 ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. 13 மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கான ஆளுநர்கள் தெரிவும் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. 16 கோடிக்கும் அதிகமான மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

மெக்ஸிகோவில் ஜூன் 2ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது சுமார் 10 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அந்நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக பிரதான வேட்பாளர்கள் இருவரும் பெண்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென் ஆபிரிக்காவில் இவ்வருடம் பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது இத்தேர்தலுக்கு இன்னும் திகதி குறிக்கப் படவில்லை.

ஆபிரிக்கக் கண்டத்தில் ருவாண்டா. நமீபியா. மொஸாம்பிக், சாட், பொட்ஸ்வானா, தென் சூடான் முதலான நாடுகளிலும் இவ்வருடம் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. பிரித்தானிய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் எதிர் வரும் டிசெம்பர் 17ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதன்பின் 25 வேலைநாட்களுக்குள் தேர்தல் நடைபெற வேண்டும். பெரும்பாலும் டிசெம்பரில் அல்லது அதற்கு முன்னர் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

### இவ்வருடம் நடைபெறவுள்ள சில தேர்தல்கள்!

**ஜனவரி:**

**07 பங்களாதேஷ் பாராளுமன்றத் தேர்தல்**

**11. செயின்ற் மார்ட்டின் பாராளுமன்றத் தேர்தல்**

**13: தாய்வான்: ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்**

**14: கொமோரோஸ்: ஜனாதிபதித் தேர்தல்**

**21 லிக்டன்ஸ்டைன்: சர்வஜன வாக்கெடுப்பு**

**26: துவாலு ஜனாதிபதித் தேர்தல்**

**28. பின்லாந்து ஜனாதிபதித் தேர்தல்**

மிகுதி 05 பக்கம் பார்க்க...

# 2024 வரலாற்றின் மிகப் பெரிய தேர்தல் வருடம்!

**பெப்ரவரி:**
04: எல் சல்வடோர் ஜனாதிபதி. பாராளு மன்றத் தேர்தல்கள்
07. அஸர்பைஜான் ஜனாதிபதித் தேர்தல்
08: பாகிஸ்தான். பாராளுமன்றத் தேர்தல்
14: இந்தோனேஷியா ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்
25: பெலாரஸ்: பாராளுமன்றம், செனகல்: ஜனாதிபதித் தேர்தல்

**மார்ச்**
01: ஈரான்: பாராளுமன்றத் தேர்தல்
08: அயர்லாந்து: சர்வஜன வாக்கெடுப்பு
10. போர்த்துகல்: பாராளுமன்றத் தேர்தல்
15-17 ரஷ்யா: பாராளுமன்றத் தேர்தல்

**ஏப்ரல்:**
10 தென் கொரியா: பாராளுமன்றத் தேர்தல்

**மே :**
05: பனாமா:ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்
12. லித்துவேனியா: ஜனாதிபதித் தேர்தல்
19: டொமினிக்கன் குடியரசு ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்

**ஜூன்:**
01. ஐஸ்லாந்து: ஜனாதிபதித் தேர்தல்
02: மெக்ஸிக்கோ: ஜனாதிபதித் தேர்தல்
09: பெல்ஜியம்: பாராளுமன்றத் தேர்தல்
22.மௌரிடானியா: ஜனாதிபதித் தேர்தல்
28: மொங்கோலியா: பாராளுமன்றத்தேர்தல்

**ஜூலை:**
15,16: ருவாண்டா ஜனாதிபதித் தேர்தல்

**ஒக்டோபர்:**
09: மொஸாம்பிக் ஜனாதிபதி, பாராளு மன்றத் தேர்த
27. உருகுவே : ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்

**நவம்பர்:**
05: அமெரிக்கா ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தன்
12. பலாவ்: ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்

**இவ்வருட ஜனாதிபதி, பரராளுமன்றத் தேர்கல்களுக்கு இன்னும் திகதி குறிக் காது நாடுகள்**
**இலங்கை இந்தியா அல்ஜீரியா, ஆஸ்தி ரியா, பொட்ஸ்வானா, சாட், குரோஷியா. கபோன், ஜோர்ஜியா, கானா, கிரிபாட்டி, லித்து வேனியா, மோல்டோவா. நமீபியா, வட மெசிடோனியா, ருமேனியா, சான் மரீனோ. ஸ்லோவாக்கியா, சொலமன் தீவுகள் தென் ஆபிரிக்கா, தென் சூடான், டோகோ, பிரித் தானியா, உஸ்பெகிஸ்தான். வெனிசுவேலா.**

**ஆர்.சேதுராமன்**

# தமிழ் கட்சிகளுடன் பேசுவதற்கு தயார்!
## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் அறிவிப்பு!



அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார பகிரங் கமாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசி யல் கட்சிகள் தமிழ் பொது வேட்பாளர் ஒருவ ரை நிறுத்துவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகை யில், ஐக்கிய மக்கள் சக்தியானது. நாட்டின் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ள தரப்பாகும். அதுமட்டுமன்றி சிறுபான்மைக் கட்சிகளும்

சிறிய கட்சிகளும் எம்முடன் தொடர்ச்சியாக ஐக்கிய கூட்டணியில் இணைந்து செயற்பட்டு வருகின்றன. அதேநேரம், தமிழ் அரசியல் கட்சிகள் தமது சார்பில் வேட்பாளரை நிறுத்து வதற்கு முழுமையான உரித்தினைக் கொண்டிருக்கின்றன. அதில் நாம் மாற் றுக்கருத்தினைக் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் அத்தரப்பினரையும் எம்முடன் இணைத்து எமது பரந்துபட்ட கூட்டணியில் பங்களிகளாக்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இன மொழி மத வேறுபாடு களைக் கடந்து அனைவரும் இலங்கையர் கள் என்ற அடையாளத்தை கட்டி யெழுப்புவ தற்காக நாம் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். ஆகவே தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எம்மிலிருந்து விலகி நிற்கும் நிலைமையை தவிர்ப்பதற்காக நாம் அனைத்து தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுக் களை நடத்துவதற்கு தயாராகவே உள் ளோம். மேலும் நாட்டில் அனைத்து சமூகங்க ளுக்கும் சுபீட்சமான எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதாக இருந்தால் அனைவரும் ஒன்றிணைவது அவசியமாகும். அந்தச் செயற்பாட்டில் நாம் அனைவருடனும் கைகோர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

தெற்கில் மாற்றத்தை மக்கள் எதிர்பார்க் கின்றார்கள் அதுபோன்று தான் வடக்கிலும் மக்கள் மாற்றத்தினை எதிர்பார்க்கின்றார்கள் அந்த மாற்றத்துக்கான தலைமையை ஐக்கிய மக்கள் சக்தி வழங்குவதற்கு தயாரா கிவிட்டது. அதற்காக அனைவரது ஒத்துழைப் புக்களையும் பெறவுள்ளோம் என்றார்.

# தமிழ்த் தேசியத் தரப்புகளை கோர்த்துவிட முயன்று ; மூக்குடைபட்ட அமைச்சர் டக்ளஸ்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கலந் துரையாடலில் தமிழ்த் தேசியத் தரப்புகளைக் கோர்த்துவிட அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா எடுத்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. யாழ் மாவட்டச் செயல கத்தில் கடந்த வியாழக்கிழமை யாழ்ப் பாணத் தேர்தல் மாவட்டத்தின் ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கடற்றொழில் தொடர்பான விவகாரம் எடுக்கப்பட்டபோது. இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைப் படகுகளின் பாதிப்பு பற்றியும் உரையாடப் பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர்களுடன் இங்குள்ள நாடாளு மன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்று பேசுவதற்கு முயற்சி எடுத்ததாகவும் . இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு முழுமையான ஆதரவு வழங்க வில்லை என்றும் குறிப்பிட்டதுடன் இந்த வழிமுறை ஊடாக

இதைத் தீர்க்கலாம் எனத் தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த ஆண்டு இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக் கின்றது. அவ்வாறான நிலையில் இவ்வா றான முயற்சி சாத்தியமில்லை என்று பதில ளித்தார்.

இதேபோன்று வலி வடக்கில் கடந்த காலங் களில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த 6 ஆயிரத்து 384 ஏக்கர் காணி சுவீகரிப்ப தற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியி டப்பட்டிருந்தது. தற்போது அதில் 3 ஆயிரம் ஏக்கர்கள் விடுவிக்கப் பட்டுள்ளநிலையில், விடுவிக்கப்பட்டகாணிகளுக்குரிய வர்த் தமானியை மீளப்பெறும் அறிவித்தல் வெளியிடப்படவில்லை என்று அவைத் தலைவர் சி.வீ.கே.சிவ ஞானம் சுட்டிக்காட் டினார். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் அந்த முயற்சியை எதிர்ப்பதால் தான் தாமதப்படுகின்றது என்று குறிப்பிட்டார். இதன் போது பதிலளித்த தெல்லிப்பளை முன்னாள் பிரதேச செயலர் எஸ். சிவசிறி. அளவீட்டுப் பணிகள் முடிவடைந்துவிட்டன. காணி அமைச்சிலிருந்து நடவடிக்கை இன்னமும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

# நாட்டில் 50 இலட்சம் பேர் வறுமைக்குள்!

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியுடன் வரிச்சுமை மக்கள் மீது சுமத்தப் பட்டதால் கடும் வறுமை நிலைக்கு ஆளாகியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்று குடிசன மற்றும் புள்ளிவிவரத்திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருந்த இந்த வறிய மக்கள். முழுச் சனத்தொகையில் 25 இலட்சமாகக்காணப்பட்ட நிலையில், தற்போது வறிய மக்கள் பிரிவுக்கு புதிதாக 30 இலட்சம் பேர் இணைக்கப்பட்டுள்ளனர். ஜனசவி. சமூர்த்திமற்றும் அஸ்வெசும போன்ற வறுமை நிவாரணம் வழங்கப்படவேண்டியவர்களின் சதவீதம் நூற்றுக்கு 11.9இல் இருந்து நூற்றுக்கு 25 என்ற அளவுக்கு அதிகரித்திருக்கிறது. இந்த வருடத்தில் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து அதிகரிக்கப்பட்ட வற்வரி வீதம் நூற்றுக்கு 18வரை அதிகரிப்பதற்கு முன்னர் இலங்கையில் மொத்த மக்கள் தொகையில் நூற்றுக்கு 27.9 வீதமானவர்கள் 2024ஆம் ஆண்டாகும்போது வறுமை நிலைக்கு ஆளாவர் என்பது உலக வங்கியின் கணிப்பாக இருந்தது. தற்போது வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# யாழ்.மாவட்டத்தில் சின்னமுத்து தடுப்பூசி ஆரம்பம்!




சின்னமுத்து தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பம்

இலங்கையில் சின்னமுத்து நோய்ப் பரவல் அதிகரித்துள்ள நிலையில், நாடளாவியரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மருந்தேற்றல் விசேட நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் நேற்று ஆரம்பமானது.

யாழ். மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்துக்காக ஆயிரத்து 850 குழந்தைகள் இனங்காணப்பட்டுள்ளன. அவர்களில் ஆயிரத்தி 733 குழந்தைகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். காய்ச்சல் மற்றும் சலியிருந்த குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கப்படவில்லை. இவர்களுக்கு அடுத்தவாரம் தடுப்பூசி வழங்கப்படும் என மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

# தை பிறக்கும் வழி பிறக்குமா?




அண்மையில் கோண்டாவில் உப்புமடச் சந்தியில்,ஒரு சமகால கருத்தரங்கு இடம் பெற்றது.தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் அக் கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியது.அதற்குத் தலைமை தாங்கிய ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் சொன்னார் தனக்கு தெரிந்த பலர் ஒரு வேளை உணவை, குறிப்பாக காலை உணவைத் தவிர்ப்பதாக. காலை உண வைக் கட்டாயம் எடுக்க வேண்டும், இரவு உணவைத் தவிர்க்கலாம் என்று தான் ஆலோசனை கூறியபோது,அவர்கள் சொன்னார்களாம்,காலை சாப்பிடாவிட்டால் அன்றைய அலுவல்களில் மூழ்கும்போது பசி தெரியாது.ஆனால் இரவு சாப்பிடாவிட்டால் பசி தெரியும் நித்திரை வராது என்று.இதுதான் பெரும்பாலான கீழ் மத்தியதர வர்க்க குடும் பங்களின் நிலைமை.ஆண்டு இறுதியில் இது தான் நிலைமை என்றால் தை பிறந்தாலும் வழி பிறக்குமா?

சாதாரண மக்களுக்கு வழி பிறக்குமோ இல்லையோ,அரசியல்வாதிகள் அதிகாரத் தைச் சுவைப்பதற்கான புதிய வழிகளைத் தேடித் திறக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனா திபதித் தேர்தலில் வெற்றி பெற வைப்பதற் காகப் புதிய கூட்டணி ஒன்றை நோக்கி ஒரு புதிய அலுவலகம் கடந்த முதலாம் தேதி ராஜகிரியவில் திறந்து வைக்கப்பட்டது.அதே நாளில், மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகிய ஷான் விஜயலால் டி சில்வா எதிரணியோடு அதாவது ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டார். இவர் தென்மாகாண சபையின் முதலமைச்சராக இருந்தவர். அவர் எதிரணியில் இணைந்து கொண்டதன் மூலம் எதிரணி தானும் பலமடைவதான ஒரு தோற்றத்தைக் கட்டியெ ழுப்ப முயற்சிக்கின்றது.

அதாவது ,புதிய ஆண்டு அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான தயாரிப்புகளோடு பிறந்திருக் கிறது என்று பொருள்.மக்கள் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் இருக்கலாம்.மரக்கறிகளின் விலை வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்து போகலாம்.வரியானது மக்களை ஈவிரக்க மின்றிக் கசக்கிப்பிழியலாம். மோட்டார் சைக்கிள் ஒரு லக்சறிப் பொருளாக மாற லாம்.ஆனால் அரசியல்வாதிகளின் அதிகாரப் பசி குறையப் போவதில்லை என்பதைத்தான் ஆண்டின் தொடக்கம் நமக்கு உணர்த்து கின்றது.

இவ்வாறு தென்னிலங்கையில் ஒரு ஜனா திபதி தேர்தலை நோக்கி பிரதான கட்சிகள் ஏற்கனவே உழைக்க தொடங்கி விட்டிருக் கும் ஒரு பின்னணியில், தமிழ்த்தரப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது?

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக முதலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது குத்துவிளக்கு கூட்டணிதான்.சில மாதங்க ளுக்கு முன் கூட்டணியின் கூட்டம் மன்னா ரில் நடந்த பொழுது ஒரு தீர்மானம் எடுக்கப் பட்டது. ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவது என்று அக்கூட்டு முடிவெடுத்தது.அந்த முடிவை வலியுறுத்தி கூட்டுக்குள் அங்கம் வகிக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவ்வப்போது கருத்து தெரிவித்து வருகிறார்.சுரேஷ் அவ் வாறு கருத்து தெரிவித்த பின் அண்மையில் விக்னேஸ்வரன் அதற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்திருந்தார்.ஒரு தமிழ் பொது வேட்பா ளராகத் தான் களமிறங்கத்தயார் என்றும் அவர் அறிவித்துவிட்டார்.

இவ்வாறு விக்னேஸ்வரன் அறிவித்த பின் கஜேந்திரக்குமார் அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தார்.தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை பகிஷ்கரிக்கும் என்பது அக்கட்சியின் நிலைப்பாடாகும்.

அதே சமயம் தமிழரசுக் கட்சி அதன் உத்தி யோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்த வில்லை.அது தன் தலைவரைத் தேர்ந் தெடுக்கும் தேர்தலில் மினக்கெடுகின்றது. எனினும் சுமந்திரனுக்கு நெருக்கமான சாணக்கியன் தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற தெரிவுக்கும் பகிஷ்கரிப்புக்கும் எதி ராகக் கருத்து தெரிவித்திருக்கிறார்.தமிழரசுக் கட்சி யாராவது ஒரு சிங்கள வேட்ப்பாளரை நோக்கித் தமிழ் வாக்குகளைத் திருப்பும் நோக்கத்தோடிருந்தால்,அக்கட்சி பொது வேட்பாளரை எதிர்க்கும்.

கடந்த 15 ஆண்டுகளில் நடந்த மூன்று ஜனாதிபதி தேர்தலின் போதும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலிமையாக முன் வைத்தது,தமிழ்மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட சுயாதீனக் குழுதான். கடைசியாக நடந்த ஜனாதிபதி தேர்தலை யொட்டி உருவாக்கப்பட்ட அக்குழுவின் முயற் சிகள் வெற்றி பெறவில்லை. எனினும்,அக் குழு அந்த முடிவை நோக்கி கருத்துருவாக்க வேலைகளைச் செய்தது.

இம்முறை குத்துவிளக்குக் கூட்டணி அந்த முடிவை எடுத்திருக்கின்றது. குத்துவிளக்கு கூட்டணி இந்தியாவுக்கு விசுவாசமான ஒரு கூட்டணியாகப் பார்க்கப்படுகின்றது. இந்தி யாவுக்கு ஆதரவான ஒரு கூட்டு என்று கருதப் படும் குத்துவிளக்கு கூட்டணி தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்தை கையில் எடுத்த தனால் அது இந்தியாவின் வேலையோ என்ற சந்தேகம் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணிக்கு ஏற்பட்டிருக்கலாம்.

முதலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும் என்று பார்ப்போம்.ஒரு தமிழ் பொது வேட்பாளர் நிச்சயமாக வெல்லப் போவதில்லை.ஆனால் அவர் பிரதான சிங்கள வேட்பாளர்களின் வெற்றிகளை சவால்களுக்கு உட்படுத்துவார்.எப்படியென் றால்,ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் கட்சிகள் கடுமையாக உழைத் தால்,தமிழ் வாக்குகள் பெருமளவுக்கு அவருக்குத்தான் விடும்.அப்படி விழுந்தால், பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கும் 50 வீதத்துக்கு மேலான வாக்குகள் கிடைக்கா மல் போகக்கூடும்.இம்முறை இரண்டுக்கு மேற்பட்ட சிங்கள வேட்ப்பாளர்கள் அரங்கில் காணப்படுகின்றார்கள்.அதாவது சிங்கள வாக்குகளே சிதறும் ஒரு நிலமை. இதில் தமிழ் வாக்குககள் கிடைக்கா விட்டால், எவருக்குமே முதற் சுற்று வாகுக்கு கணக் கெடுப்பில் வெற்றி கிடைக்காமல் போகலாம். அப்பொழுது இரண்டாவது சுற்று வாக்கு கணக்கெடுப்புக்கு போக வேண்டிவரும். அதில் தமிழ் மக்கள் யாருக்கு தமது இரண்டா வது விருப்பு வாக்கை வழங்குகிறார்களோ அவரே வெற்றி பெறுவார்.அதாவது யார் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதனை தமிழர்கள் தீர்மானிக்கக்கூடிய பேர வாய்ப்பைப் பரிசோதிக்கும் ஒரு முயற்சியே அது.

பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கு தமிழ் வாக்குகள் கிடைக்காது என்றால், அவர்கள் தமிழ்த் தரப்போடு பேரம்பேச வருவார்கள். அப்பொழுது தமிழ் மக்களின் கோரிக்கை களை ஏற்றுக்கொள்ளும் ஒருவருக்கு தமிழ் மக்கள் தமது இரண்டாவது விருப்பு வாக்கை அளிக்கலாம்.அதாவது தமிழ் வாக்குகளை ஒரு சிங்கள வேட்பாளருக்கு “பிளாங்க் செக்காக வழங்குவதற்கு பதிலாக பேர வாய்ப் பாக அதைப் பயன்படுத்துவது.

ஆனால் இதில் உள்ள பிரச்சினை என்ன வென்றால் தமிழ் மக்களோடு வெளிப்படை யான ஓர் உடன்பாட்டுக்கு வரும் சிங்கள வேட்பாளர் தென்னிலங்கையில் தோற்கடிக் கப்படும் ஆபத்து அதிகமுண்டு என்பதுதான். அதனால் எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் தமிழ் மக்களோடு பேரம்பேசத் தயங்குவார். ஆனால் அதுகூட தமிழ் மக்கள் வெளி உலகத்துக்கு ஒரு உண்மையைச் சொல் வதற்குரிய வாய்ப்பை உருவாக்கும்.அது என்னவெனில், சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் யாருமே இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ் மக்களுக்கு வெளிப் படையான வாக்குறுதிகளை வழங்கத் தயாரில்லை என்பதுதான்.

எனவே ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் தமிழ் மக்களுக்கு உள்ள பேர வாய்ப்புகளை பரிசோதிக்கலாமோ இல்லையோ,தமிழ் மக்களின் மக்கள் ஆணையை புதுப்பிப் பதற்கு உதவுவார்.அவர் தமிழ் மக்களின் உச்சபட்ச கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் வாக்குகளைக் கேட்பார். தேர்தல் என்று வந்தால் அது ஒரு ஜனநாயகக் கொண்டாட்டம். அங்கே கட்சிகளுக்கு புது ரத்தம் பாச்சப்படும். கட்சித் தொண்டர்கள் உற்சாகமாக இறங்கி வேலை செய்வார்கள். கிராமங்கள்தோறும் கட்சி அலுவலகங்கள் திறக்கப்படும். கிராம மட்டத்தில் கட்சி வலையமைப்புகள் பலப்படுத்தப்படும்.ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி எல்லா கட்சிகளும் அவ்வாறு உழைக்கும் பொழுது, அது தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒரு தேசமாகத் திரட்டும்.

ஏற்கனவே கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தலில் போதும் தமிழ் மக்கள் ராஜபக்சக்களுக்கு எதிராகத் திரளாக வாக்களித்து இருக்கிறார்கள். அவ்வாறு ஒரு சிங்கள வேட்பாளருக்கு எதிராக விழும் வாக்குகளை தமிழ் மக்கள் ஆணைக்கான வாக்குகளாக மாற்றினால் என்ன?

கஜேந்திரகுமார் கூறுகிறார்,ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் இறுதியாக யாராவது ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிப்பார் என்பத னால் அந்தத் தெரிவை தாம் ஏற்கவில்லை என்று. மேலும் ஒற்றை ஆட்சிக்குள் ஒரு தீர்வை ஏற்றுக் கொள்ளும் கட்சிகள் அவ் வாறு ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டுகிறார்.

ஆனால் இங்கு ஏற்கனவே பார்த்தது போல,பிரதான சிங்கள வேட்பாளரோடு பேரம் பேசக்கூடிய நிலைமைகள் குறைவாக இருக்குமென்றால்,அதை தமிழ் மக்களின் ஆகப்பிந்திய ஆணையைப் பெறுவதற்கான ஒரு மறைமுக வாக்கெடுப்பாக தமிழ்மக்கள் பயன்படுத்தலாம்.தமது உச்சமான கோரிக் கைகளை முன்வைத்து அதற்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்பதனை வெளி யுலகத்துக்கு எடுத்துக் கூறலாம்.

இந்த கோரிக்கையை முன்வைப்பது சுரேஷ் பிரேமச்சந்திரன் அல்லது குத்து விளக்கு கூட்டணி அல்லது விக்னேஸ்வரன் என்பதற் காக அதனை எதிர்க்கத் தேவையில்லை. அது தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் வாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்ற அடிப் படையிலாது அதைப் பரிசோதிக்கலாம்.

> **“ ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் ரணில்,சஜித் உட்பட எல்லா சிங்கள வேட்பாளர்களையும் சவால்களுக்கு உட்படுத்துவார்.அவர்களை தமிழர்களை நோக்கி வரச்செய்வார்.அல்லது அவர்கள் தமிழர்களுக்கு எதிரான வெளிப் படையான நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்துவார்.அதாவது சிங்கள வேட்பாளர்களை அம்பலப்படுத் துவார். ஆனால் இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக,அவர் தமிழ் மக்களின் ஆகப் பிந்திய மக்கள் ஆணையை வெளிக் கொண்டு வருவார். ”**

தமிழ் மக்களை ஐக்கியப் படுத்துவார்.அந்த ஐக்கியத்துக்கு தகுதியான வர்கள் தலைமை தாங்கலாம்.

ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் கட்டாயமாக விக்னேஸ்வரனாகத்தான் இருக்க வேண் டும் என்றில்லை.கிழக்கிலிருந்து ஒருவரைத் தெரிவு செய்யதால் அது மிகச்சிறப்பு.ஒரு பெண்ணாக இருந்தால் அதுவும் சிறப்பு. அவர் ஒரு குறியீடு.கட்சிகளாக,வடக்குக் கிழக்காக,சமயங்களாக,சாதிகளாக,ஒரே கட்சிக்குள் இருவேறு குழுக்களாக,முகநூல் குழுக்களாக,சிதறிக்கிடக்கும் ஒரு சமூகத் தை,ஒரு தேர்தலை நோக்கியாவது ஆகக்கூ டிய பட்சம் ஒரு தேசமாகத் திரட்ட அவருக்கு வாய்ப்பளித்தால் என்ன ?

# ஈழத்தில் களைகட்டும் ஜல்லிக்கட்டும், மாட்டுவண்டிச் சவாரியும்!





தைப்பொங்கல் என்றாலே தமிழ் மக்களின் வாழ்வில் விழாக்கோலம் தோன்றிடும் பண்டிகைக் காலமாக அமைந்திடும். தமிழ் மக்களின் வாழ்வில் புது விடியலாக பிறக்கும் தைப் பொங்கல் நாட்களிலேயே , தமிழரின் வீர விளையாட்டுக்களான ஜல்லிக்கட்டு தமிழகத்திலும், மாட்டு வண்டிச் சவாரி ஈழத்திலும் செழிமையாக காலங்காலமாக நடாத்தப் படுகிறது.

### ஜல்லிக்கட்டும் - மாட்டு வண்டிச் சவாரியும் :

ஈழத்தில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது. அது ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது.

அதனைப் போலவே தமிழ் நாட்டில் ஏறதழுவுதல், ஏறுகோள், மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, பொல்லெருது பிடித்தல் என்று தமிழகத்தின் பல பகுதிகளில் பல பெயர்களில் தமிழர்களின் வீர விளையாட்டாம் ஏறுதழுவுதல் பொங்கல் நாட்களில் சிறப்புடன் காலங்காலமாக நடாத்தப்படுகிறது.

### தமிழ் இலக்கியத்தில் ஜல்லிக்கட்டு :


பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிந்துவெளி நாகரிகத்திலும் ஏறுதழுவல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் பல உள்ளன. ஏறு தழுவுதல் (மஞ்சு விரட்டுதல்) என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் காளையை அடக்கும் வீர விளையாட்டின் பெயராகப் பயின்று வருகிறது. இவ்விளையாட்டு, முல்லை நில மக்களின் திருமணத்துடன் தொடர்புடையதாகப் பண்டைக்காலத்தில் இருந்ததாகவும் அறியப் படுகிறது.

ஏறு தழுவல், மஞ்சு விரட்டு அல்லது ஜல்லிக்கட்டு என்பது தமிழர்களின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றாகும். ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும். மாட்டை ஓட விட்டு அதை மனிதர்கள் அடக்குவது, அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான விளையாட்டு. தமிழ் நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் ஜல்லிக்கட்டின் "சொர்க்க பூமியாக " இன்னும் திகழ்ந்து வருகிறது.

முல்லைநில மக்களின் வீரவிளையாட்டாக இருந்தாலும் தென் தமிழகத்தின் மதுரை மாவட்டம் சார்ந்த பகுதிகளில் இவ்விளையாட்டு இன்றும் ஆர்வமாக நிகழ்த்தப்படுகிறது.

### சிந்துவெளி நாகரிக சான்று :

கொல்லக்கூடிய காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் 'கொல்லேறு தழுவுதல்' என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இந்தியத் தலைநகர் புது தில்லி தேசியக் கண்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்ற சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில் ஒரு காளை உருவமும் அதை அடக்க முயலும் வீரரை அக்காளை தூக்கி எறிவதும் உயி




ரோட்டமான விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

பண்பாட்டுத் திருவிழாவாகவும், மக்களின் சமயம் சார்ந்த திருவிழாவாகவும், இளைஞர்களின் வீர உணர்வை நினைவுகூரும் விழாவாகவும் நடைபெறும் ஏறுதழுவுதல் பற்றி தமிழ் இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன.

சங்க இலக்கியப் பாடல்களில் இடம்பெற்றுள்ள 'ஜல்லிக்கட்டு' என்பது தமிழர்களின் கலாச்சார அடையாளங்களில் ஒன்று. 2000ஆண்டுகள் முன்பாகவே ஏறுதழுவல் வழக்கத்தில் இருந்தது என்று தமிழ் அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு ஒழுங்கு முறைக்குள் வந்து விட்ட இவ் ஏறுதழுவுதல் நிகழ்ச்சி அதற்கும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.

குறிஞ்சி நில மக்களும் முல்லைநில மக்களும் தங்கள் நிலங்களில் உள்ள வலிமை வாய்ந்த எருதுகளை ஒன்றுடன் ஒன்று பொரும்படியாகச் செய்து ஆரவாரம் செய்வர். இவ்வெருதுகளின் வெற்றியைத் தங்கள் வெற்றியாக எண்ணி மகிழ்வர்.

இந்தியா ஒரு பன்முக கலாச்சாரம் கொண்ட நாடு. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு கலாச்சாரம் உண்டு. அவ்வகையில் தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு என்பது ஜாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. ஜல்லிக்கட்டு என்பது பொங்கல் தினத்தன்று நடைபெறக்கூடியது. இது சிறந்த விளைச்சலை கொடுத்ததற்காக இயற்கைக்கு நன்றி கூறும் திருவிழா ஆகும்.

### இயற்கைக்கு நன்றி கூறும் திருவிழா :

சல்லி என்பது விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தினைக் குறிக்கும். புளியங்கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் தற்போதும் வழக்கத்தில் உள்ளது.

அதோடு, 50 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த "சல்லிக் காசு" என்னும் இந்திய நாணயங்களைத் துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அணைக்கும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும். இந்தப் பழக்கம் பிற்காலத்தில் "ஜல்லிக்கட்டு" என்று மாறியது. பேச்சுவழக்கில் அது திரிந்து "ஜல்லிக்கட்டு" ஆனது என்றும் கூறப்படுகிறது.

### தமிழ்நாட்டின் கலாச்சார அடையாளம்:

ஜல்லிக்கட்டு விழாவின் பின்னர் பல கோயில்களில் இதனை அடுத்து திருவிழாக்கள் கொண்டாடப்படும் தமிழகத்தின் சமயம் மற்றும் இறை நம்பிக்கை சார்ந்த நிகழ்வும் கூட. ஜல்லிக்கட்டு என்பது வெறும் பொழுது போக்கு விளையாட்டு மட்டுமல்ல. அது தமிழ்நாட்டின் கலாச்சார அடையாளமும் கூட.

அதனால்தான் ஒவ்வொரு முறையும் பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கலாச்சாரத்தை தெரிந்து கொள்ள நேரடியாக ஜல்லிக்கட்டை காண வருகிறார்கள். ஜல்லிக்கட்டு தொடர்பான ஏராளமான சுடுமண் சிற்பங்கள் உள்ளிட்டவையும் தொல்பொருள் ஆய்வுகளில் கிடைத்திருக்கிறது.

சங்க காலத்து தமிழ் இலக்கியங்களான தொல்காப்பியம், கலித்தொகை உள்ளிட்டவற்றில் ஏறு தழுவுதல் என்ற பெயரில் ஜல்லிக்கட்டின் முழு விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளதை காணலாம்.

பல பல்கலைக்கழக ஆய்வுகளும், தமிழ்நாடு மாநிலத்தின் கலாச்சார அடையாளம் ஜல்லிக்கட்டு என்பதை நிரூபித்துள்ளது. புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளரான ரோமீலா தாபர், தனது புத்தகத்தில் ஒரு இனத்தின் கலாச்சார தொடர்புகள் குறித்து தெளிவாக வரையறுத்துள்ளார். அவை அத்தனையும் தமிழ்நாட்டு ஜல்லிக்கட்டுக்கு பொருந்தி செல்கிறது.

### ஏறுதழுவுதலும் ஜல்லிக்கட்டும் :

ஏறு தழுவுவதற்கும் ஜல்லிக்கட்டுக்கும் சில வேறுபாடுகளே உள்ளன. முல்லை நிலத்து மக்களிடத்தில் மட்டுமே ஏறுதழுவுதல் இடம் பெற்றது. தற்போது ஜல்லிக்கட்டில் ஆயர் மட்டுமின்றிப் பல திறத்தவரும் பங்கேற்கிறார்கள். இருப்பினும் ஜல்லிக்கட்டில் வென்றவர் பணமுடிப்பினைப் பரிசாகப் பெறுதல் ஆயரிடம் பெரும்பான்மையாக உள்ளது.

ஜல்லிக்கட்டு தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப்பொங்கல் நாளன்று விழா போல்





கொண்டாடப்படுகிறது. ஏறு தழுவுதல் விழா தெய்வ நம்பிக்கையுடன் தொடர்புடையதாக இருக்கவில்லை. ஆனால் ஜல்லிக்கட்டு கிராமிய தேவதைகளின் வழிபாட்டு நம்பிக்கையுடன் தொடர்புடையதாகத் திகழ்கிறது.

அம்மை போன்ற கொடிய நோய்கள் பரவிய காலத்திலும், மழையில்லா வறட்சிக் காலங்களிலும், பிள்ளை வரம் கேட்கும் நிலையிலும் வேண்டுதல் நடைபெறும். இக்குறைகள் நீக்கப்பட்டால் பொங்கல் நாளன்று ஜல்லிக்கட்டுகிறோம் என்பதே வேண்டுகோளாய் அமைகிறது.


### ஐரோப்பிய நாடுகளில் காளைப்போர் :

ஸ்பெயின், போர்த்துக்கல் மேற்குலக நாடுகளில் காளைப் போர் முக்கியமான தேசியப் பொழுதுபோக்கு விளையாட்டாக இன்றும் நடைபெறுகிறது. காளைகளை அரங்கத்திற்குள் விரட்டி, ஆத்திரமூட்டிச் சண்டையிட்டுக் கொல்வதே இக்காளைப் போரின் நோக்கம். இம்மேனாட்டுக் காளைப் போரும் ஜல்லிக்கட்டும் ஒன்று போலத் தோன்றினாலும், இரண்டும் முற்றிலும் வேறுபட்டவை ஆகும்.

**தமிழர்களின் வரலாற்றுப் பெருமையை எடுத்துரைக்கும் ஜல்லிக்கட்டு,**

காலப் பழைமையால் பல்வேறு மாற்றங்களுடனும், சமூக நிலைகளுக்கு ஏற்பவும் இவ்வீர விளையாட்டு நிகழ்த்தப்பட்டாலும் இது தொன்மையானது என்பதிலும், மக்களின் பண்பாடு சார்ந்தது என்பதிலும் ஐயமில்லை. தமிழர்களிடம் எஞ்சியிருக்கும் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான ஏறுதழுவுதல் அடுத்த தலைமுறைக்கும் கெண்டு சேர்க்கப்பட வேண்டும்.


தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரத்தையும், பழந்தமிழ் வீர விளையாட்டுக்களையும், தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது தாயக மக்களின் கடமை மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்களின் பெருங்கடமையும் காலத்தின் கட்டாயமுமாகும்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# விஜயகாந்த் வாழ்க்கை வரலாறு!

## அரிசி ஆலை முதல் எதிர்க்கட்சித் தலைவர் வரை...




**கட்சி ஆரம்பித்து ஓராண்டுகூட நிறைவடையாத நிலையில், 2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தனித்துப் போட்டி என்று கூறி 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியவர்.**

**பிறப்பும் பின்னணியும்:**

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952-ம் ஆண்டு, ஆகஸ்டு 25-ம் தேதி அழகர்சாமி-ஆண்டாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் விஜயராஜ் என்கிற விஜயகாந்த். இவரின் மனைவி பிரேமலதா. இவர்களுக்கு விஜய பிரபாகரன், சண்முக பாண்டியன் என இரண்டு மகன்கள் இருக்கிறார்கள்.

**வராத படிப்பும்... வந்த நடிப்பும்:**

சிறு வயது முதலே சினிமாமீது இருந்த பிடிப்பின் காரணமாக, பல பள்ளிகள் மாறியும் அவரால் பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படிக்க முடிந்தது. அதேநேரம் தான் விரும்பிப் பார்க்கும் எம்.ஜி.ஆரின் படங்களை சீன் பை சீனாகத் தன் நண்பர்களிடம் விவரிக்கும் அளவுக்கு சினிமா மீது அவருக்கு ஆர்வம் இருந்தது. படிப்பை நிறுத்திய பிறகு கீரைத் துரையில் இருக்கும் தன் தந்தையின் அரிசி ஆலையில் பணிபுரிந்தார்.

**திரைப் பயணம்: விஜயராஜ் விஜயகாந்த்**

தனது நண்பர்களின் உந்துதலின் பெயரிலும், தனக்கிருந்த ஆர்வத்தாலும் சினிமாவில் நடிப்பது என முடிவுசெய்து சென்னைக்கு வந்தார். பல்வேறு அவமானங்கள், புறக்கணிப்புகளுக்கு மத்தியில், 1979-ம் ஆண்டு எம்.ஏ.காஜாவின் இயக்கத்தில் வெளியான இனிக்கும் இளமை“ படத்தில் நடித்து, தன் திரைப்பயணத்தைத் தொடங்கினார். விஜய




ராஜ் என்ற தன் பெயரை விஜயகாந்த் என மாற்றிக்கொண்டார். சட்டம் ஒரு இருட்டறை“, தூரத்து இடிமுழக்கம்“, அம்மன்கோவில் கிழக்காலே“, உழவன் மகன்“, சிவப்பு மல்லி“ என வெற்றிப் படங்களைக் கொடுத்து தமிழின் முன்னணிக் கதாநாயகனாக வலம்வந்தார். கிட்டத்தட்ட 150-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த விஜயகாந்த், 1984-ல் மட்டும் ஒரே ஆண்டில் 18 படங்களில் நடித்து சினிமாத்துறையில் வரலாற்றுச் சாதனை புரிந்தார்.

1999-ம் ஆண்டு நடிகர் சங்கத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார் விஜயகாந்த். பல ஆண்டுகளாக அடைக்க முடியாமல் இருந்த நடிகர் சங்கக் கடனை சிங்கப்பூர், மலேசியா என தமிழர்கள் அதிகம் வாழும் வெளிநாடுகளில் நட்சத்திரக் கலை விழாக்கள் நடத்தி வட்டியும் முதலுமாக அடைத்தார். மேலும், நலிவடைந்த கலைஞர்களுக்கு உதவி செய்வதற்காக ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்து, பெரும் தொகையை வங்கியில் சேமிப்பு செய்தார். 2002-ம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்னை உச்சத்தில் இருந்தபோது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து நீர் தராத கர்நாடாகாவுக்கு மின்சாரம் இல்லை!“ என்கிற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலியில் நடத்தினார்.

**தனிப்பற்று: தமிழ்மீதும்,ஈழத்தமிழர்மீதும்...**

1965-ம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தனது சிறு வயதிலேயே விஜயகாந்த் பங்கேற்றதாகச் சொல்லப்படுகிறது. அதேபோல, 1984-ம் ஆண்டு ஈழத்தமிழர்கள் மீதான படுகொலையைக் கண்டித்து சக நடிகர், நடிகைகளுடன் ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் நடத்தி, படுகொலையை நிறுத்தவும், நீதி வேண்டியும் தமிழக ஆளுநரிடம் மனு அளித்தார். பின், 1986-ம் ஆண்டு அதே காரணங்களுக்காக சென்னை வட்டாட்சியர் அலுவலகத்தில் உண்ணா விரதம் இருந்தார் விஜயகாந்த். அவரின் ரசிகர் மன்றத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பும் ஈழத்தமிழர்களுக்காக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து ஈழத் தமிழர்களுக்காகக் குரல்கொடுத்தும், 1989-களில் மண்டபம் உள்ளிட்ட முகாம்களில் அகதிகளாக வசிப்பவர்களுக்கு உதவி புரிந்தும் வந்தார். ஈழத்தமிழர்கள் உணர்வை உணர்ந்தவராக, ஈழத்தமிழர்கள் அழும்போது, என்னால் கொண்டாட்டத்தில் இருக்க முடியாது என்று கூறி தனது பிறந்தநாள் கொண்டாட்டைத் தவிர்த்தார். (பின்னாள்களில் அவரின் பிறந்தநாள் வறுமை ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டு, ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன).

தனது 100-வது படத்துக்கு கேப்டன் பிரபாகரன்“ எனவும், தனது மூத்த மகனுக்கு விஜய பிரபாகரன்“ எனவும் பெயர்வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதும், ஈழத்தின் மீதும் தனக்கிருந்த பற்றைப் பறைசாற்றினார்.

தென்னிந்திய, அகில இந்திய“ என்றிருந்த தனது ரசிகர் மன்றத்தின் பெயரை 1982-ல் தமிழ்நாடு விஜயகாந்த் தலைமை ரசிகர் மன்றம் எனவும் பெயர் மாற்றம் செய்தார்.

**தேமுதிக: ரசிகர் மன்றம் அரசியல் கட்சி**

2000-ம் ஆண்டு, பிப்ரவரி 12-ல் தனது ரசிகர் மன்றத்துக்கென தனிக்கொடியை அறிமுகப்படுத்தினார். அதைத் தொடர்ந்து, 2001-ம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் பல்வேறு இடங்களில் சுயேச்சையாகப் போட்டியிட்டு, பலர் வெற்றியும் அடைந்தனர். 2002—ல் ராஜ்ஜியம்“ படத்திலிருந்து அரசியல் குறித்த வசனங்கள் அவரின் படங்களில் பட்டாசாக வெடிக்கத் தொடங்கின. அப்படி, விஜயகாந்தின் இந்த அரசியல் நகர்வுகளைப் புரிந்து கொண்டதாலேயே ஆளும் அரசியல் கட்சிகள் அவருக்குப் பல நெருக்கடிகளைக் கொடுத்து வந்தன. அதேவேளையில், அரசியலுக்கு வர, சரியான களத்துக்காக, காரணத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார் விஜயகாந்த். கள்ளக் குறிச்சியில் தன் ரசிகர் மன்ற நிர்வாகி ஒருவரின் திருமண விழாவில் விஜயகாந்த் வருகையை முன்னிட்டு கட்டப்பட்ட மன்றக் கொடிக்கம்பங்களை பா.ம.க-வினர் வெட்டிச் சாய்த்ததாகச் சொல்லப்பட்டது.

அதைத் தொடர்ந்து, நடந்த திருமண நிகழ்வில் ராமதாஸையும், அவரின் மகன் அன்புமணி ராமதாஸையும் விஜயகாந்த் விமர்சிக்க, பதிலுக்கு விஜயகாந்தை ராமதாஸ் விமர்சிக்க, ராமதாஸ் - விஜயகாந்த் மோதல், பா.ம.க தொண்டர்கள் — விஜயகாந்த் ரசிகர்கள் என விரிவடையத் தொடங்கியது. பல இடங்களில் விஜயகாந்தின் மன்றக் கொடிகள் வெட்டிச் சாய்க்கப்பட, மன்ற நிர்வாகிகள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

விஜயகாந்த் நடித்த கஜேந்திரா“ படத்துக்கு ராமதாஸால் சிக்கல் எழுந்தது. விஜயகாந்தைக் கடுமையாக விமர்சித்து வட மாவட்டங்களில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

கண்கள் சிவக்க வெகுண்டெழுந்தார் நடிகர் விஜயகாந்த். ஊர் ஊராகச் சென்று தன் ரசிகர் மன்ற நிர்வாகிகளைச் சந்திக்க ஆரம்பித்தார். சென்ற இடங்களிலெல்லாம் விஜயகாந்துக்கு பலத்த வரவேற்பு கிடைத்தது. விஜயகாந்தைக் காண மக்கள் கூட்டம் அலைமோதியது. திருவண்ணா மலையில் கட்சி அறிவிப்பு, ஈரோட்டில் கட்சி தொடங்கும் தேதி, மாநாடு அறிவிப்பு என அதிரடிகாட்டத் தொடங்கினார் விஜயகாந்த். அந்தநேரத்தில் கோயம்பேடு மேம்பால விரிவாக்கத்துக்காக விஜயகாந்தின் மண்டபம் கையகப்படுத்த விருப்பதாகத் தேசிய நெடுஞ்சாலைத்துறையிட மிருந்து விஜயகாந்துக்கு நோட்டீஸ் பறந்தது. இந்தநிலையில், 2005-ம் ஆண்டு, செப்டம்பர் 14-ம் தேதி மிகப்பெரிய மாநாட்டை மதுரையில் நடத்தி, தேசிய முற்போக்கு திராவிட கழகம்” எனும் அரசியல் கட்சியைத் தொடங்கினார் விஜயகாந்த்.

**தனித்து: சட்டமன்ற உறுப்பினராக...**

கட்சி ஆரம்பித்து ஓராண்டு நிறைவடையாத நிலையில், 2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தனித்துப் போட்டி என்று கூறி 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியவர், பா.ம.க-வின் கோட்டையான விருத்தாசலம் தொகுதியில் அமோக வெற்றிபெற்றார். மற்ற வேட்பாளர்கள் தோல்வியடைந்தாலும் கணிசமான வாக்குகளைப் பெற்று, தே.மு.தி.க-வுக்கு 8.4 சதவிகித வாக்குகளைப் பெற்றுத்தந்தனர். அதைத் தொடர்ந்து, 2009-ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் தனித்து நின்று, தோல்வியைத் தழுவினாலும் 10 சதவிகித வாக்குகளை தே.மு.தி.க பெற்றது.

தனித்தே போட்டியிட்டுவந்த விஜயகாந்த், முதன் முறையாக 2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்தார். 41 இடங்களில் போட்டியிட்ட தே.மு.தி.க., 29 இடங்களில் வெற்றி பெற்று எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது. ரிஷிவந்தியம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற விஜயகாந்த் முதன்முறையாக சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவரானார்.

**மக்கள் நலக்கூட்டணி: முதல்வர் வேட்பாளராக...**

2011-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து நடைபெற்ற முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விஜயகாந்துக்கும்




மிகுதி 09 பக்கம் பார்க்க...

# விஜயகாந்த் வாழ்க்கை வரலாறு!

## அரிசி ஆலை முதல் எதிர்க்கட்சித் தலைவர் வரை...





ஜெயலலிதாவுக்கும் மோதல் ஏற்பட்டு, அ.தி.மு.க-தே.மு.தி.க கூட்டணி முறிந்தது. 2014-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்று தேர்தலைச் சந்தித்த தே.மு.தி.க., போட்டியிட்ட 14 தொகுதிகளிலும் படுதோல்வியடைந்தது.

2016-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் ம.தி.மு.க., வி.சி.க., த.மா.கா., கம்யூனிஸ்ட் கட்சிகள் அங்கம்வகித்த மக்கள் நலக்கூட்டணியில் இணைந்து, முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு தேர்தலைச் சந்தித்தார் விஜயகாந்த். ஆனால், தேர்தல் முடிவில் ம.ந.கூட்டணி உட்பட தே.மு.தி.க-வும் போட்டியிட்ட 104 தொகுதியிலும் படுதோல்வியடைந்தது. உளுந்தூர்பேட்டையில் போட்டியிட்ட விஜயாகாந்த் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு டெபாசிட் இழந்தார்.

2019-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் அ.தி.மு.க-பா.ஜ.க கூட்டணியில் இடம்பெற்று நான்கு தொகுதியில் மட்டுமே போட்டியிட்ட தே.மு.தி.க அனைத்திலும் படுதோல்வியடைந்தது.

**தொடர் சரிவில்: செல்வாக்கும் வாக்குவங்கியும்**

தனித்துப் போட்டியிட்டபோது 8.4%, 10% ஆக இருந்த தே.மு.தி.க-வின் வாக்குவங்கி, கூட்டணிக்குச் சென்ற பின்னர் 7.9%, 6.1% எனக் குறைந்து 2016 சட்டமன்றத் தேர்தலில் 2.4% ஆகச் சரிந்தது. நிர்வாகிகள் பலர் அ.தி.மு.க-வுக்கும் தி.மு.க-வுக்கும் சென்றனர். போதாக்குறைக்கு விஜயகாந்தின் உடல்நிலையும் மோசமடைந்தது. தொடர்ந்து, 2021 சட்டமன்றத் தேர்தலில் அ.ம.மு.க-வுடன், தே.மு.தி.க கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்திக்கிறது. ஆனால், இந்தத் தேர்தலில் விஜயகாந்த் போட்டியிடவில்லை. அவரின் மனைவியும், கட்சியின் பொருளாளருமான பிரேமலதா விஜயகாந்த் விருத்தாசலம் தொகுதியில் போட்டியிடுகிறார்.

**சரித்திர சாதனைகளும்... சறுக்கிய விமர்சனங்களும்:**

விஜயகாந்த், தான் அரசியலுக்கு வருவதற்கு முன்பாகவே 1989-ல் ஈரோட்டில் இலவச மருத்துவமனை, சென்னை சாலிகிராமத்தில் இலவச மருத்துவமனை, ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கு லட்சக்கணக்கில் கல்வி நிதியுதவி, எம்.ஜி.ஆர் காது கேளாதோர்வாய் பேசாதோர்பள்ளி, லிட்டில் ஃபிளவர் பார்வையற்றோர் பள்ளிகளுக்கு நன்கொடை, தமிழகம் முழுவதும் 60 இடங்களில் இலவச கணினிப் பயிற்சி மையம், இலவச திருமண மண்டபங்கள், ஏராளமான ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணம், கேப்டன் ஸ்போர்ட்ஸ் அகாடமி எனக் கலக்கியவர். குஜராத் பூகம்பம், கார்கில் போர், சுனாமி, கும்பகோணம் பள்ளி தீ விபத்து எனப் பல சோக நிகழ்வுகளுக்குத் தன் சொந்தச் செலவில் நிவாரணங்களை கொடுத்து உதவிவந்தார். அரசியல் கட்சி தொடங்கிய பின்னர் தானே புயல், ஆந்திரா புயல், ஒடிசா வெள்ளம் எனப் பாரபட்சமின்றி முதல் ஆளாக முன்வந்து நிவாரணங்கள் வழங்கினார். மேலும், பல்வேறு தமிழர் சார்ந்த உரிமைப் போராட்டங்களையும் முன்னின்று நடத்தினார். இது போன்று எண்ணிலடங்கா சாதனைகளுக்குச் சொந்தக்காரர் விஜயகாந்த்.

அதேவேளையில், சட்டமன்றத்தில் கடுமையாக நடந்துகொண்டது, வேட்பாளரை அடித்தது, மனைவிமைத்துனர் ஆதிக்கத்தில் கட்சியை விட்டது ஆகியவை இவர்மீது முன்வைக்கப்படும் விமர்சனங்கள். இருப்பினும், தனிப்பட்ட முறையில் அனைவராலும் நேசிக்கக்கூடிய நல்ல மனிதராகவே இன்றள வும் வலம்வருகிறார் விஜயகாந்த்.

# யாருக்கும் கிடைக்காத அதிஷ்டயோகம்!! 2024 இல் பணவரவை அள்ளப்போகும் மூன்று ராசியினர்!





நவகிரகங்களில் மங்கள கிரகமாக விளங்கக்கூடிய சுக்கிரன், மாதத்திற்கு ஒரு முறை தனது இடத்தை மாற்றக்கூடிய கிரகமாக விளங்குகிறார்.

இவர் தன்னம்பிக்கை, தைரியம், செல்வம், செழிப்பு, ஆடம்பரம், சொகுசு, காதல் மன உறுதி உள்ளிட்டவர்களுக்கு காரணியாக விளங்கி வருகிறார்.

செவ்வாய் பகவான் 45 நாட்களுக்கு ஒரு முறை தனது இடத்தை மாற்றுவார். செவ்வாய் பகவான் தற்போது விருச்சிக ராசிக்குள் பயணம் செய்து வருகிறார்.

கடந்த டிசம்பர் 25ஆம் திகதி சுக்கிர பகவான் விருச்சிக ராசியில் நுழைந்தார். இவர்கள் இருவரும் நட்பு கிரகம் என்பதால் இவர்களுடைய சேர்க்கை நன்மைகளை கொடுத்து வருகிறது.

அந்தவகையில், செவ்வாய் மற்றும் சுக்கிரன் சேர்க்கையால் அதிர்ஷ்டத்தை பெறப்போவது

### மிதுன ராசி

செவ்வாய், சுக்கிரன் சேர்க்கை மிதுன ராசியில் ஆறாவது வீட்டில் நிகழ்ந்துள்ளது. இதனால் உங்களுக்கு குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் அனைத்தும் விலகும்.

மேலும், அதிர்ஷ்டத்தின் முழு ஆதரவும் கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும்.

வருமானத்திற்கு எந்த குறையும் இருக்காது. புதிய வருமானத்திற்கான ஆதாரங்கள் அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் மரியாதை அதிகரிக்கும். வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டாகும்.

### சிம்ம ராசி

சிம்ம ராசியில் நான்காவது வீட்டில் செவ்வாய் சுக்கிரன் சேர்க்கை உருவாக்கியுள்ளது. குடும்ப உறுப்பினர்களால் மகிழ்ச்சி உண்டாகும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வேலைகள் முடிவடையும்.

மேலும் உடன் பிறந்தவர்களால் மகிழ்ச்சி உண்டாகும். வேலை செய்யும் இடத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

கடின உழைப்பு நல்ல பலன்களை தரும். உயர் அலுவலர்களால் மகிழ்ச்சியான சூழ்நிலை அமையும். வியாபாரம் மற்றும் தொழில் நல்லலாபத்தை பெற்று தரும்.

### விருச்சிக ராசி

செவ்வாய் மற்றும் சுக்கிரன் விருச்சிக ராசிக்கு நல்ல பலன்களை கொடுக்கப் போகின்றனர். உடல் ஆரோக்கியத்தில் இருந்த சிக்கல்கள் அனைத்தும் விலகும். மாணவர்கள் கல்வியை சிறந்து விளங்குவார்கள்.

மேலும், தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முயற்சிகள் வெற்றியை தேடி தரும். நீதி மன்ற வழக்குகள் உங்களுக்கு சாதகமாக முடியும். பெற்றோரின் முழு ஆதரவு உங்களுக்கு கிடைக்கும். நிதி சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்த சிக்கல்கள் அனைத்தும் விலகும்.








# புலம்பெயர் தேசங்களின் எழுச்சியின் மீதான ரணிலின் யுத்தமா...



தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் புலம்பெயர் தேசத்தின் பங்களிப்பு என்பது மிகவும் முக்கியமான ஒன்று. நிலத்தில் நடந்த போராட்டத்திற்காக புலத்தில் பல்வேறு வகையிலும் எம் ஈழத் தமிழர்கள் உழைத்தார்கள்.

போராட்டங்களாக இருக்கட்டும், பொருளாதார உழைப்பாக இருக்கட்டும் தாய்நிலத்திற்கா புலம் செய்த பணிகள் என்பவை மகத்தானவை.

அது மாத்திரமின்றி ஈழத் தமிழ் மக்களின் விடுதலை நோக்கிய இலட்சியப் போராட்டத்தை பன்னாட்டு சூழலில் கொண்டு சேர்க்கும் பணியிலும் புலம்பெயர் தேசத்தின் எழுச்சி பெரும் பங்களிப்பை வளங்கி வருகின்றது.

இந்த நிலையில் ஆயுதப் போராட்டத்தை ஒடுக்கிய சிறிலங்கா அரசு புலம்பெயர் தேசத்தின் எழுச்சிகளை ஒடுக்க வியூகங்களை வகுகிறத என்ற அச்சமே இப்போது மேலிடுகிறது.

### உலகத் தமிழர் பேரவை

இமாலயப் பிரகடனம் இலங்கைத் தீவில் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான பிரச்சினையும் போராட்டமும் எழுபது ஆண்டுகளை கடந்து நீள்கிறது. இந்த நிலையில் புலம்பெயர் தேசத்தின் தமிழர் அமைப்பான உலகத் தமிழர் பேரவை இலங்கையின் பௌத்த பிக்கு குருமார்களுடன் இணைந்து அரசியல் தீர்வொன்றை காண முனைவதாக சொல்லப்படுகிறது.



அந்த அடிப்படையில் கடந்த காலத்தில் தமிழீழத்தை நோக்கிப் பயணித்த, தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்த குறித்த அமைப்பு இன்று சிறிலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்கவையும் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவையும் சந்தித்துள்ளது.

குறித்த அமைப்பின் கீழ் செயற்படும் கனேடிய தமிழ் காங்கிரஸ் போன்ற அமைப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. இமாலயப் பிரகடனம் என்ற பெயரில் இரு தரப்பும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் குறித்து பல்வேறு சந்தேகங்களும் சர்ச்சைகளும் அரசியல் புலத்தில் தோன்றியுள்ளன.

சுய நிர்ணய உரிமையை கைவிடுதல், இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணையை கைவிடுதல், சிறிலங்கன் என்ற அடையாளத்திற்குள் தீர்வை ஏற்றுக்கொள்ளுதல் என்ற நிபந்தனைகள் அல்லது விட்டுக்கொடுப்புக்களின் பின்னணியில் தான் இமாலயப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அப்படி என்றால் அதற்கு இமாலயப் பிரகடனம் என்று பெயர் சூட்டுவது எப்படிப் பொருத்தமாக அமையும்? மலையின் பெயரால் மடுவை காண்பிக்கும் முயற்சியா இது?

புலம்பெயர் அமைப்புக்களுடன் பௌத்த குமார்கள் இணைந்து தீர்வு முயற்சி பற்றிப் பேசுவதை வரவேற்க வேண்டும் என்று நடுநிலையாளர்கள் கூறுகின்ற போதும், தாயக தமிழர்களின் பங்களிப்பு இன்றி நடக்கும் இந்த நடவடிக்கைதான் பலவேறு சந்தேகங்களை எழுப்புகிறது.

### தமிழீழத்தை கைவிடும் நிபந்தனையா?

தமிழீழத்தை நாம் கைவிடுகிறோம் என்று உலகத் தமிழர் பேரவை கூறுகிறது, ஆனால் தமிழீழத் தீர்வு எந்தக் காலத்தில் யாரால் முன்வைக்கப்பட்டது என்பதை நாம் அவதானிக்க வேண்டும்.

1976ஆம் ஆண்டு மே 14ஆம் திகதி வட்டுக்கோட்டையில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில், ஈழத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தனித் தமிழீழம் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், அந்த தீர்மானத்தை மக்கள் ஆணையாகப் பெறும்பொருட்டு, 1977இல் நடந்த தேர்தலில் மக்கள் பெரு ஆதரவு வழங்கினர். இதன் வாயிலாக தமிழீழத் தீர்வு என்பது தமிழ் ஈழ மக்களின் ஆணையாக வழங்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டத்திற்கும் தாக்கமாக அமைந்திருந்தது

இந்த நிலையில் மக்கள் ஆணை வழியாக பெறப்பட்ட, தனித் தமிழீழ தீர்மானத்தை, புலம்பெயர் தேச அமைப்பொன்று, தாம் விடுவதாக கூறுவதை ஏற்றுக்கொள்வது சிக்கலானதே.

அது குறித்த அமைப்பு சார்ந்த முடிவாக இருக்குமே தவிர, தமிழ் மக்களின் தீர்மானமாக இருக்க இயலாது.

இதேவேளை, கடந்த காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தனிநாட்டுக்கோரிக்கையை தமிழீழத்தை கைவிடுவதாகவும் சுயநிர்ணய உரிமை கொண்ட தீர்வை, பிளவுபடாத இலங்கைக்குள் முன்வைக்குமாறும் கோரிய போதும்கூட 2009 இனப்படுகொலைக்குப் பிந்தைய காலத்தில் சிறிலங்கா அரசு அதனை சற்றும் கவனம் கொள்ளவில்லை.

இந்த நிலையில்தான் தாயக தலைவர்களை புறந்தள்ளிவிட்டு எப்படியான தீர்வு முயற்சியை சிறிலங்கா அரசு தரப் போகிறது என்ற சந்தேகம் எழுகிறது.

### தலைவர் பிரபாகரனின் கோரிக்கை

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன் செயலாலும் அமைதியாலும் புன்னகையாலும் வருடத்திற்கொரு முறை நிகழ்த்தும் உரையாலும் இலட்சியம் நோக்கி ஈழ மக்களை பயணிக்கச் செய்தவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்.

அவர்மீது கொண்ட நம்பிக்கைமிகு பேரன்பினாலும் தாயக விடுதலைமீது கொண்ட பெருந்தாகத்தினாலும் புலம்பெயர் தேச மக்கள் அங்கிருந்து பல்வேறு வகையான செயற்பாடுகளையும் உழைப்புக்களையும் முன்னெடுத்தார்கள்.

களத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில், புலம்பெயர் மக்கள் பனியிலும் நெருப்பிலும் உழைத்த உழைப்பு விடுதலைப் போராட்டத்தை தாங்கி நகர்த்தியது என்பதை யாவரும் அறிவோம்.

இந்த நிலையில், ஈழத் தமிழ் மக்களின் விடுதலை மற்றும் உரிமை குறித்தும் இன ஒடுக்குமுறையை தடுக்கும் நீதி குறித்தும் புலம்பெயர் தேசத்தில் முன்னெடுக்கும் செயற்பாடுகளும் போராட்டங்களும் பன்னாட்டுச் சூழலில் பெரும் புரிதல்களை ஏற்படுத்தி அரசியல் மாற்றங்களை நிகழ்த்தக் கூடியவை.

இதனால் 2008 மாவீரர் தின உரையின் போது ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து தாங்கிச் செல்ல புலம்பெயர் தேசங்கள்மீது மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அழைப்பு விடுத்திருந்தார்.


அத்துடன் இளைய சமூகத்தினரை குறிப்பாக அழைத்து பொறுப்பேற்க வேண்டும் என்றும் தலைவர் அழைப்பு விடுத்தமை, புலம்பெயர் தேசத்தின் எழுச்சியின் அவசியத்தை உணர்த்துகின்ற கால முக்கியத்துவம் வாய்ந்த நகர்வாகும்.

### புலம்பெயர் அமைப்புக்களை சிதைக்கவும் அழிக்கவுமா?

தாயகத்தில் உள்ள தமிழ் தரப்புக்களை சிதைப்பதில் சிறிலங்கா அரசு வெற்றி கண்டு வருகின்றது. குறிப்பாக 2002 சமாதான ஒப்பந்த காலத்தில் விடுதலைப் புலிகள் தீர்வை சமாதானத்தின் வழியாக முன்வைக்க ஒரு வாய்ப்பை திறந்தபோது, சிறிலங்கா அரசு தன்னை போருக்குத் தயார்படுத்தியதுடன், விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டது.

அதன் அடிப்படையில்தான் கருணா அம்மான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து செல்லும் நிலை உருவாக்கப்பட்டது. இதனை தான் பெற்ற போர் வெற்றியாகவே அன்றைய பிரதமரும் இன்றைய அதிபருமான ரணில் கூறுவதை பார்த்திருக்கிறோம். அதேபோன்று 2015இல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை பெற்றதுடன் அக் கட்சிக்குள் சில பிளவுகளை உருவாக்கவும் ரணில் காய்களை நகர்த்தியிருந்தார்.இந்த நிலையில் புலம்பெயர் தேச அமைப்புக்களை சிதைக்கவும் அழிக்கவுமான அடுத்த யுத்தத்தை ரணில் தொடங்கியுள்ளாரா? அதுதான் இமாலயப் பிரகடனமா? உலகத் தமிழர் பேரவைமீது புலம்பெயர் தேசமக்களும் தாயக மக்களும் பல்வேறு அதிருப்திகளையும் எதிர்ப்புக்களையும் வெளிப்படுத் தத் துவங்கியுள்ளனர்.

அதேபோன்று கனேடியத் தமிழ் காங்கிரஸ் போன்றவையும் சிக்கலை எதிர்நோக்கத் துவங்கியுள்ளன. இப்படியான செயற்பாடுகள் வழியாக புலம்பெயர் தேசத்தில் அனைத்து தமிழர் அமைப்புகள்மீதும் மக்களின் எதிர்ப்பை ஏற்படுத்துவதான் ரணில் அரசின் இலக்கா? இந்த அரசியலை புரிந்துகொண்டு புலம் பெயர் தேச அமைப்புக்கள் தமிழர்களுக்கான இலட்சியத் தீர்வுக்கும் இனவழிப்புக்கான நீதிக்குமாக தமது பயணத்தை செழுமைப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



# தமிழீழ தேசியப் பிரச்சனை திம்புக்கோட்பாடுகளின் அடிப்படையிலே தீர்க்கப்பட வேண்டும்! அடிப்படை நிலைப்பாடுகளில் சமரசம் செய்ய முடியாது!



“2024 ஆம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு செய்தியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத தின் பிரதமர் விசுவநாதன் ருத்ரகுமாரன் தமிழீழ தேசிய பிரச்சனை திம்புக்கோட்பாடு களின் அடிப்படையிலே தீர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மேலும் அக்கோட்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு புலம்பெயர் அமைப்புக்களால் ஒருங்கி ணைந்து 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி உருவாக்கிய பொது நிலைப்பாடுகள் எந்த ஒரு அரசியல் தீர்வுக ளும் முக்கிய வகிபாகமாக இருக்க வேண்டு மென குறிப்பிட்டுள்ளார்

மேலும் 2024 ஆம் ஆண்டு உலகின் பல முக்கிய இடங்களில் தேர்தல்கள் நடைபெற உள்ளதை குறிப்பிட்ட ருத்ரகுமாரன் இந்திய தேர்தல் தொடர்பாக, அரசியல் கட்சிகள் மத்தியில் நமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கச் செய்து அவற்றை தேர்தல் விஞ்ஞா பனங்களில் உள்ளடக்க உள்ள வாய்ப்புக்கள் குறித்து தமிழ் மக்கள் கவனம் கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். சிறீலங்கா ஜனாதிபதி தேர்தல், தமிழ் மக்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் என்ற நிலையில் இருந்து தேர்தலை எதிர்கொள் ளும் வாய்ப்புகள் குறித்து சிந்திக்க வேண்டும் என கூறியுள்ளார். இவ்வருடம் நடைபெற இருக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நான்காவது அரசவைக்கான தேர்தலில் புலம் பெயர் ஈழத் தமிழர் தேசம் பல்லாயிரக்கணக் கில் பங்களித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஜனநாயக விழுமியத்தை பலப்படுத்த வேண்டும் என கூறியுள்ளார்.

தற்போது பாலஸ்தீனத்தில் நடைபெறும் அனர்த்தங்கள் ஐக்கியநாடுகள் சபை உட்பட்ட உலக அமைப்புகள் நீதியை நிலைநாட்ட திராணி அற்றவை என்பதை எடுத்துக்காட்டு கின்றது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், உலகில், நீதியையும் சமாதானத்தையும் நிலை நாட்ட, புதிய பொறிமுறைகளையும், புதிய நியதிகளையும் உருவாக்குவதற்கான முயற்சியில், உலகின் ஏனைய அரசற்ற தேசங்கள், அனைத்துலக சிவில் சமூகம், அறிவு ஜீவிகள், சமூக வலைத்தளங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து ஈடுபடும் எனக் குறிப்பிட்டுள்ளார்.”

அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழ் மக்க ளுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் எனது ஆங்கிலப்புத்தாண்டு வாழ்த்து களைத் தெரிவித்துக் கொள்வதில் பெரும கிழ்வு அடைகிறேன்.

புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவிக்கும் இத் தருணத்தில், கடந்த ஆண்டு தொடர்பான சில கருத்துக்களையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

கடந்து போன ஆண்டில் தமிழ் மக்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் நடைபெறவில்லை.

உலக அரங்கில், ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்கள் இஸ்ரேலின் கொடூரமான தாக்குதல் களால் சொல்லணாத் துயரங்களை அனுப வித்த ஆண்டாக கடந்த ஆண்டு அமைந் திருந்தது.

கடந்த ஆண்டில் பாலஸ்தீன மக்கள் அனுப வித்த துயரம் நாகரிக உலகம் வெட்கித் தலை குனியும் வகையில் அமைந்ததோடு, முள்ளி வாய்க்கால் தமிழின அழிப்புக்காலத்தில் நமது மக்கள் சந்தித்த பெருந்துயரையும் எமக்கு நினைவு படுத்தியிருந்தது. மலர்ந் துள்ள புத்தண்டிலாவது இம் மக்களின் வாழ்வு பாதுகாப்பானதாக மாற வழிவகை பிறக்கும் என நம்புவோம்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலக அமைப் புகள் எவையும் நீதியின் பக்கம் நின்று உலகப்பிரச்சினைகள் எதனையும் தீர்த்து வைக்கும் திராணியற்றவை என்பதனை தற்போது பாலஸ்தீனத்தில் நடைபெறும் நிகழ்வுகள் மீண்டுமொருமுறை வெளிப் படுத்தி நிற்கின்றன.

எமது சூழலை எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டில் அனைத்துலக அரசுகள் சிலவற் றின் அரவணைப்புடன் ‘ஹிமாலயா பிரகட னம்’ என்ற பெயரில் நடைபெற்ற அரசியல் பித் தலாட்டம் ஒன்றையும் நாம் காண நேர்ந்தது. இப் பிரகடனமும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற காட்சிகளும் எந்தவகையிலும் தமிழ் மக்களின் நன்மை கருதியதாக அமையவில்லை.

தமிழ் டயாஸ்போறாவின் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டையும், தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமை போராட்டத்துக்கு சார்பான நிலைப்பாட்டையும் நீர்த்துப் போகச் செய்ய விரும்பும் அனைத்துலக அரசுகள் சில தமக்குச் சேவகம் செய்யக்கூடியவர்களை தமிழர் தரப்பில் இருந்து இப் பிரகடனத் துக்காகத் தெரிவு செய்துள்ளது போலத் தெரி கிறது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் எவரும் எந்த வகையிலும் தமிழ் மக்களின் அரசியல் விருப்புக்களைப் பிரதிபலிப்பவர்கள் அல்ல.

இதனால், இவர்களின் எந்தப் பிரகடனமும் தமிழ் மக்களுக்கு ஒரு பொருட்டு அல்ல. இதனைத் தாயகத்திலும் டயாஸ்பொறா விலும் இருந்து வெளிவந்த கருத்துகள் வெளிப்படுத்துகின்றன. இதேவேளை, தென் னிலங்கையிலும். அனைத்துலக தூதுவரால யங்கள் மட்டத்திலும் இப் பிரகடனம் குறித்தும், அதனைத் தொடர்ந்த காட்சிகள் குறித்தும் ஒரு வகையான பரபரப்புக் காட்டப்பட்டதை உணர முடிந்தது.

அனைத்துலக தூதுவராலயங்கள் காட்டிய இப் பரபரப்பின் பின்னால் தமிழ் டயாஸ் பொறாவின் தமிழ்த் தேசிய அரசியலை மழுங்கடிக்கும் ஆர்வமும், ரணில் விக்கிர சிங்காவை சிறிலங்காவின் அடுத்த ஜனாதி பதியாக்கும் விருப்பும் புதைந்திருக்கலாம். ஆனால், இந்த ‘இமாலயப் பிரகடன’ நகர்வால் ஒரணு கூட அசையப் போவ தில்லை என்பதே நடைமுறை உண்மை யாக அமையும்.

பிறந்திருக்கும் புத்தாண்டில், உலகளா வியரீதியில் முக்கியமான சில நாடுகளில் தமது ஆட்சியாளர்களைத் தேர்வு செய்வதற் கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் நடைபெறும் தேர்தல்கள் உலகளாவிய கவனத்தை ஈர்ப்பன.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தியாவின் பாராளுமன்றத்துக்கு 2024 இல் நடைபெறும் தேர்தல்கள் கூடுதல் கவனத்துக்கு உரியவை.

தமிழ்நாட்டிலும், இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் ஈழத் தமிழ் மக்களின் போராட்டம் குறித்த கவனத்தை ஏற்படுத்துவதில் தமிழர் தரப்பு கூடுதல் அக்கறை கொள்ள வேண்டும். அரசியல் கட்சிகள் மத்தியில் நமக்குச் சாதகமான நிலைப்பாட்டை எடுக்கச் செய்து, அவற்றை தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்க உள்ள வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலும் இவ் வருடம் நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் தமிழ் மக்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் என்ற நிலையில் இருந்து தேர்தலை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் குறித்து சிந்தித்தல் வேண்டும்.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நாலாவது அரசவைக்கான தேர்தலும் நடைபெற உள்ளது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாவது தேர்த லில் எவ்வாறு பல்லாயிரக்கணக்கான மக் கள் பங்களித்தார்களோ, அதே போன்று இம்முறையும் புலம்பெயர் ஈழத்தமிழர்தேசம் பங்களித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத் தின் ஜனநாயக விழுமியங்களுக்கு வலுச்சேர்க்கவேண்டும் என இப்புத்தாண்டுச் செய்தியில் உங்களிடம் உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, திம்புக்கோட்பாடுகளான, தமிழர் தேசம், தமிழர் தாயகம், தமிழர் தேசத்தின் சுயநிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படையி லேயே மேற்கொள்ளப்பட வேண்டும். ஈழத் தமிழரின் அரசியல் தீர்வு குறித்து பல்வேறு புலம்பெயர் அமைப்புகள் ஒருங்கிணைந்து 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி உருவாக்கிய பொது நிலைப் பாட்டில் (Common Principles) உள்ளடக்கப்பட்ட பின்வரும் விடயங்கள், அடிப்படை விடயங்களாக அமைய வேண்டும் என்பதனை இப்புத்தாண்டுச் செய்தியில் வலியுறுத்த விரும்புகிறேன்.

1) இலங்கைத் தீவின் வடகிழக்கு பிராந்தியத்தில் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்) 1948 க்கு முன்பிருந்து வாழ்ந்த மக்கள் மற்றும் அவர்களின் சந்ததியினரின் பங்கேற்புடன் ஒரு ஜனநாயகவழி, மற்றும் அமைதியான நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்காகத் தமிழர்களின் பெருவிருப் புக்களைப் பூர்த்தி செய்யும், சர்வதேச அளவில் நடத்தப்பட்டதும் மற்றும் கண்காணிக்கப்பட்டதுமான, பொது சன வாக்கெடுப்பு ஒன்றை அனுமதித்தல்.

2) இலங்கைத் தீவின் வடகிழக்கு பகுதியில் இடைக்கால சர்வதேச பாதுகாப்பு பொறி முறை.

3) இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குதல்

4) இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற் றங்கள் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கையில் நிலவும் நிலைமையை பரிந்துரைத்தலுடன், இனப்படுகொலைக் குற்றத் தடுப்பு மற்றும் தண்டனை மற்றும் சித்திரவதைக்கு எதிரான தடுப்பு தொடர்பான மாநாட்டின் அடிப்படை யின் கீழ் சர்வதேச நீதிமன்றத்தின் முன் இலங்கைக்கு எதிரான சட்ட நடவடிக்கை.

இந் நிலைப்பாடுகளைத் தமிழர் தரப்பு தனது அடிப்படை நிலைப்பாடுகளாகக் கொள்ளல் முக்கியமானது. இந் நிலைப்பாடுளில் தமிழர் தேசம் சமரசம் செய்து கொள்ள முடியாது. இங்கு நடைமுறைச் சாத்தியம் என்று கூறி இந் நிலைப்பாடுகளை நீர்த்துப் போகச் செய்யும் எந்த முயற்சிகளும் எதிரிக்குச் சேவகம் செய்யக் கூடியவை என்பதனை நம்மவர் கவனத்தில் வைத்துக் கொள்ளல் அவசியம்.

உலகின் தற்போதைய அனைத்துலக கட்டமைப்புகள் நீதியின்பாற்பட்டு இயங்கு பவையாய் இல்லை. இதனால், நீதியின்பால் நின்று செயற்படக்கூடிய புதிய கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இது நடை முறைக்குக் கடினமான இலட்சிய நிலைப் பட்ட கோரிக்கையாக இருக்கலாம். இருப் பினும், புதிய மாற்றத்துக்கான அவசியம் காலத்தின் தேவையாக உள்ளது. உலகின் ஏனைய அரசற்ற தேசங்கள், அறிவுஜீவிகள். அனைத்துலக சிவில் சமூகம், சமூக வலைத்தளங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் புதிய மாற்றத்துக்கான முயற்சியில் ஈடுபடும்.

நிறைவாக, மலர்ந்திருக்கும் புத்தாண்டில் ஈழத் தமிழர் தேசம் தனது இலட்சியத்தில் முன்னோக்கிப் பயணிக்கும் என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டை வரவேற்போமாக!

# ஐம்பது ஆண்டுகளை கடக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை!

**“தமிழ் மக்கள் மீதான கலாசார அழிப்பின் ஆரம்பமே 1974 தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையாகும். 50வது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையை 10ஜனவரி 2023 தமிழர் தாயகம் அனுஷ்டிப்பதையோட்டி இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது”**

ஒரு இனத்தை அழிக்குமுன் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை அழி என்பதே எதிரிகளின் போருபாயமும், தந்திரமாகும். அதற்கு ஒப்பாக, ஈழத்தில் தமிழர் கலாசாரப் படுகொலையின் ஆரம்பம் தான் 1974 யாழ் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும்.

### சிறீமா அரசின் இனபாகுபாடு:

தமிழ் மரபையும், வரலாற்றையும் காத்து நிகழ இருந்த, தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமே துடைக்க முடியாத கறையாகியுள்ளது.

சிறிலங்கா அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958 ,1977 , 1983இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. தமிழர் கலாச்சாரத்தை அழிக்க நிகழ்ந்த பண்பாட்டுப் படுகொலை தான் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும்.

ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10, 1974 இல் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒன்பது பேர் இலங்கை காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டால் மரணம் அடைந்தனர்.

சிங்கள பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் மின்கம்பிகள் அறுந்து மக்கள் திரண்டிருந்த இடத்தில் விழுந்தமை, ஆயிரக்கணக்கில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனத் திரண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமை, இரவு நேரத்தில் ஏற்பட்ட இக்குழப்பத்தினால் நிகழ்ந்த விபத்துகள், இந்தக் குழப்பங்களினால் இந்த மரணங்களுக்குக் காரணமாயின.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறீமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, காவல்துறையினரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுட்டுமன்றி தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப்படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது.



### மேயர் அல்பிரட் துரையப்பாவின் வஞ்சகம்:

யாழ்ப்பாணத்தில் தமிழராட்சி மாநாடு நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த சிறீமாவோ அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் மாநகர முதல்வர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது. இவைகள் எவ்வாறு இருந்தாலும், மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மனவெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட சிங்கள அரசாங்கம் சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.

அதேவேளை மாநாட்டுக் குழுத்தலைவர் அன்றைய நீதியாளர் தம்பையா மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து விலக பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதிவரை யாழ். முற்றவெளி திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கோலாகலம் பூண்டிருந்த யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் யாழ். நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. ஜனவரி







10 ஆம் திகதி மாநாட்டுக்கு வருகை தந்திருந்த அறிஞர்கள் கௌரவிப்பு மற்றும் விருது வழங்கல் என்பன யாழ் திறந்த வெளி அரங்கில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அன்றைய தினம் குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது.

ஆனாலும் குறித்த நிகழ்வைத் தடுக்கும் வண்ணம் அப்போது மேயராக இருந்த சிறீமாவின் ஆதரவாளர் அல்பிரட் துரையப்பா யாழ் திறந்த வெளியரங்களில் நிகழ்வுகளை நடத்தவும் அனுமதி தரமறுக்க குறித்த திறந்த வெளி அரங்கம் மூடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனால் குறித்த நிகழ்வுகள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகின. பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்ததால் வீரசிங்கம் மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிரம்ப, ஏனைய பொதுமக்கள் வீரசிங்க மண்டபத்திற்கு முன்னாலும், யாழ் முற்ற வெளியிலும் தங்கியிருந்தனர்.

### இறுதி நாள் நிகழ்வு:

1974ஆம் ஆண்டு ஜனவரி பத்தாம் திகதி இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், ஈழப் பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள்.

ஈழத் தமிழ் மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதியாகத் தமிழகப் பேராசிரியர் “நைனா முகமது” பேசிக் கொண்டிருக்கும் போது உதவிக்கு யாழ். காவற்துறைமா அதிபர் சந்திரசேகரா தலைமையிலான காவற்துறை மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டார்கள்.

இச் சம்பவத்தில் ஒன்பது பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பல தமிழ் மக்கள் காயமடைந்தனர். நிகழ்ச்சி அரங்குகள் சேதமடைந்தன. இம்மாநாட்டினைக் குழப்பிய யாழ் உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் காவற்றுறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளான 10.01.1974 அன்று கொல்லப்பட்ட மக்களின் விபரம் வருமாறு: வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 மாணவன்),பரம்சோதி சரவணபவன் (வயது 26), வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32),ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 ஆசிரியர்), புலேந்திரன் அருளப்பு (வயது 53), இராசதுரை சிவானந்தம் (வயது 21 மாணவன்), இராஜன் தேவரட்ணம் (வயது 26), சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 ஆயுள்வேத வைத்தியர்), சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 மாணவன்) ஆகியோர் இம் மாநாட்டில் களப்பலியாகினர்.

இந்த இறப்புகளின் பின்னர் தீவிரமாக வெளிப்பட்ட தமிழ்த் தேசியவாத போக்கினால், ஈழப் போராட்டம் பின்னர் தீவிரமாக வளர்ச்சியுறத் தொடங்கியது.

50வது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையை 10ஜனவரி 2024 தமிழர் தாயகம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கிறது. தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத வடுவை உருவாக்கியுள்ளது.







விழாக் கோலத்தில் யாழ் நகர் 1974 தை

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# ஊடகவியலாளர் லசந்தவின் நினைவு தினம்! கவனயீர்ப்பு போராட்டம் மட்டக்களப்பில் முன்னேடுப்பு!





இலங்கையில் படுகொலைசெய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் 15வது ஆண்டு நினைவு தினம் கடந்த 08ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்பில் உள்ள ஊடகவியலாளர்களின் நினைவு தூபியில் அனுஸ்டிக்கப்பட்டது. கிழக்கு இலங்கை செய்தியாளர் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையம் என்பன இணைந்து இந்த நிகழ்வினை நடாத்தியிருந்தது. மட்டக்களப்பு நகரில் உள்ள இலங்கையில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து கடத்தப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், மதத்தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பூர்ணா நர்த்தனாலயம் நடத்திய நிருத்திய நாட்டிய சங்கமம்! சாவகச்சேரி கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.





தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா ஆரியரத்ன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் மாகாண நடனபாட ஆசிரிய ஆலோசகர் பாரதி சிவயோகநாதனும், சிறப்பு அதிதிகளாக ஓய்வு நிலை வலய கல்வி பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், கோப்பாய் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் அன்ரன் யோகநாயகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சைந்தவி ஜனார்த்தனன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் தயாசக்தி பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இந்த நாட்டிய சங்கமம் நிகழ்வில் பூர்ணா நர்த்தனாலாலய மாணவிகளின் நாட்டிய அரங்கேற்றங்களும் இடம்பெற்றன. நிகழ்வில் நடன மாணவர்கள், பெற்றோர்கள் பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.



தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

thesiyamnews@gmail,com

Whatsapp

+94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME

# தைத் திங்களைத் தமிழ் மரபுரிமை மாதமாக அங்கீகரிக்குமாறு பிரித்தானிய பிரதமருக்கு கோரிக்கை!

பிரித்தானிய தமிழர் பேரவை ஆகிய நாம் தமிழரின் தை திருநாளினை முன்னிட்டு கடந்த பல வருடங்களாக தை மாதத்தினை தமிழர்களின் மரபுரிமை மாதமாக பிரித்தானியாவில் அங்கீகரிக்கப்படுவதற்காக, பிரித்தானியாவின் அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து தை பொங்கல் திருநாளினை பிரித்தானிய பாராளுமன்றத்தின் உள்ளே, எம் கலை, கலாச்சார அம்சங்களை முன்றுத்தி தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றோம்.

நீண்ட பாரம்பரியங்களையும் நிலத்தையும் உரித்தாகக் கொண்ட எம் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகளை பிரித்தானிய தமிழர் பேரவையினராகிய நாம், சர்வதேச நாடுகளுடன் இணைந்து மேற்கொண்டு வரும் சம காலத்தில், எமக்கான தனித்துவமான கலாச்சாரம், பராம்பரிய விழுமியங்களை சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் சென்று நாம் ஒரு தனித்துவமான தேசிய இனம், எமக்கான சட்டபூர்வமான உரிமைகள் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்னும் கருப்பொருளுடன் இந் நிகழ்வினை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம். கடந்த பல வருடங்களாக பல தரப்பட்ட தளத்தில் இருந்து குறிப்பாக பிரித்தானியாவின் ஆளும் கட்சி, எதிர் கட்சி மற்றும் ஏனைய கட்சி உறுப்பினர்களிடமிருந்து எமக்கான ஆதரவு கிடைக்கப் பெற்று வருகிறது.

இன்நிலையில் பிரித்தானிய அரசின் அதிகாரபூர்வமான அங்கீகாரத்துக்கான அடுத்த கட்ட நடவடிக்கையாக, சென்ற வருடத்தில் தொடங்கிய முயற்சியினால் பல்வேறு தமிழ் அமைப்புகளுடன் கூட்டாக இணைந்து முறைப்படியான விண்ணப்பம் ஒன்றினை பிரித்தானிய பிரதமர் அவர்களிடம் முதல்கட்ட நடவடிக்கையாக தற்போது சமர்ப்பித்துள்ளோம்.

இவ் அங்கீகாரத்தின் மூலம் தமிழர்கள் சிறுபான்மை இனம் அல்ல, எமக்கான நீண்ட நெடிய வரலாறு, தனித்துவமான கலாச்சாரம், பண்பாடுகள் உள்ளன என்பதனை உலகறிய செய்ய முடியும் என்பதுடன் இனவழிப்பிற்கு உட்படுத்தப்படும் எம் மக்களின் தனித்துவத்தைப் பேணும் முறையான அரசியல் தீர்வுக்கு இவ்வாறான அங்கீகாரம் உறுதுணையாக இருக்கும் என்பது எம் நம்பிக்கை.




இச் செயற்பாட்டுக்கு ஒப்பம் தந்து தம்மையும் இவ் விண்ணப்பத்தில் இணைந்து கொள்ள விரும்பும் தமிழர் நலன் பேணும் பிரித்தானியா அமைப்புக்கள், தமிழ் பாடசாலை நிர்வாகங்கள், பழைய மாணவர் சங்கங்கள், ஊர்ச்சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஆலய நிர்வாகங்கள் எம்மை தொடர்பு கொண்டு எமக்கான இவ் அங்கீகார முன்னெடுப்புக்கு ஆதரவு நல்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

# உண்மையான நல்லிணக்கம் என்றால் எம் உறவுகளை விடுதலை செய்யுங்கள்!

## ஜனாதிபதியிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு எடுத்துரைப்பு!

**”சமூகங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கம் மலர வேண்டுமானால், சிறையில்வாடும் எமது 12 தமிழ் அரசியல் கைதிகளையும் எதிர்வரும் சுதந்திரதினத் துக்கு முன்னர் விடுதலை செய்ய வேண்டும்” என்று ஜனாதிபதியிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு நோக்கிய விஜயத்தை இலக்கு வைத்து கடந்தவாரம் முதல், சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கையெழுத்து வேட்டையைக் குரலற்றவர்களின் குரல் அமைப்பு முன்னெடுத்திருந்தது.

அந்தவகையில், மிக நீண்ட காலங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட் டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளையும், எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னதாக விடுதலை செய்ய வேண்டும் என்கின்ற கோரிக்கையை முன்னிறுத்தி மதத்தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்பு களின் பிரதிநிதிகள் எனப்பல தரப்பட்டவர்களிடம் இருந்தும் திரட்டப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய குறித்த மகஜர். நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன்போது ஜனாதிபதியிடத்தில், ”சமூகங்களுக் கிடையில் உண்மையான நல்லிணக்கம் மலர வேண்டுமானால்,சிறையில் வாடும் எமது 12 தமிழ் அரசியல் கைதிகளையும் எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னர் விடுதலை செய்ய வேண்டும்” எனத் தெரிவித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன், அதற்கான கையெழுத்து மகஜரையும் ஜனாதிபதியிடத்தில் கையளித்துள்ளார். அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

”மிக நீண்ட காலமாகச் சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்.

தற்போதுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படும் வரை இந்த நாட்டில் இன முரண்பாடுகளும் அவநம்பிக்கையும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இந்த நாட்டில் நீண்டகாலமாக இனம் என்ற வகையில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் இன, அரசியல் பிரச்சினைகளுக்கு நீதியான நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்பது அவசியமானதுடன், போரினாலும் மற்றும் இன்றும் போரின் விளைவுகளாலும் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிரந்தர நீதியைப் பெற்றுக் கொடுப்பதும் அவசியமாகும். சமூகக் கண்ணோட்டம் கொண்ட மனித நேயமுள்ள சிவில் அமைப்புகளாக நாம் இதன் மூலம் மட்டுமே இலங்கைத் தீவில் உண்மையான, நிலையான. நியாயமான அமைதியை அடைய முடியும் என்று நம்புகின்றோம்.

இவ்வகையில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையானது தமிழ் மக்கள் மத்தியில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது. தற்போதுள்ள இனப் பதற்றத்தைத் தீர்ப்பதற்கான நல்லெண்ண முயற்சியாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நீங்கள் ஏற்கனவே ஆரம்பித்திருந்தீர்கள். ஆனால், தற்போது அவ்வேலைத் திட்டம் தேக்கமடைந்துள்ளது. தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கை தொடர்வது நல்லிணக்க முயற்சியாக தமிழ் மக்களுக்கு தங்கள் மீது வலுவான நம்பிக்கையை ஏற்படுத்த உதவும்.

வரலாறு முழுவதும், அரசியல் கைதிகள் அல்லது போர்க் கைதிகளின் விடுதலை அல்லது பரிமாற்றம் என்பது பிளவுபட்ட அல்லது போரில் இருக்கும் இரு தரப்பினரிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிக்கும் செயலாக நீக்கப்பட வேண்டியதும் சர்வதேச ரீதியில் நாட்டிற்கு அவமானத்தைத் தருவதுமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் காரணமாக நீண்டகாலமாக 15 முதல் 28 ஆண்டுகள் வரை சிறையில் வாடும் 12 தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் அதே சட்டத்தின் காரணமாக 14 ஆண்டுகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு மேல் நீதிமன்றத்தில் வழக்கை எதிர்கொண்டு 15 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் ரூபா 25000 அபராதம்“ எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின் சட்டமா அதிபரின் மேன் முறையீட்டுக்கு அமைய மேன்முறையீட்டு நீதி மன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான திருமதி செ.சத்தியலீலா ஆகியோரையும் எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் விடுவித்து அவர்களது உறவினர்களுடன் சாதாரண வாழ்க்கை வாழ அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். நீண்ட கால சிறைவாசம் காரணமாக இந்த தமிழ் அரசியல் கைதிகள் முதியவர்கள். நோயாளிகள், சிறையில் இளமையை இழந்தவர்கள் என உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிக்கப் பட்டு, தினம் தினம் விடியலை எதிர் பார்த்து நடைபிணங்களாக சிறையில் வாடுகின்றனர். மனிதாபிமான அடிப்படையிலும் மற்றும் இனங்களுக்கடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டும் திருமதி சத்தியலீலா உட்பட எஞ்சிய 12 தமிழ் அரசியல் கைதிகளையும் அனைத்து வழக்குகளில் இருந்தும் குற்றச்சாட்டுகளை விலக்குவது மூலமும் அல்லது தண்டனைகளில் இருந்து பொது மன்னிப்பு வழங்குவ தன் மூலமும் எந்தவித பாகுபாடும் இன்றி உடனடியாக விடுதலை செய்யுமாறு. துன்பப்படும் எமது மக்கள் சார்பாக கேட்டுக்கொள் கிறோம். என்றுள்ளது.



# ஜனாதிபதித் தேர்தல் விவகாரம்!

## தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் முடிவு எடுக்க வேண்டும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்து



"ஜனாதிபதித் தேர்தல் தொடர் பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாக ஒரு முடிவை எடுக்க வேண்டும். சிவில் அமைப் புக்களுடனும், இலங்கைத் தமி ழரசுக் கட்சியுடனும் இது தொடர் பில் பேசுவோம். கஜேந்திரகுமார் பொன்னம்பலத் தின் கட்சியுடனும் பேசுவதற்கு முயற்சிப்போம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார். வவுனியாவில் உள்ள ரெலோ அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக் கையில்.

"ஜனாதிபதி அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது நில அபகரிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக நாம் அவருடன் பேசியிருந்தோம். இன்னும் பல விடயங்களை பேசியிருந்தோம். நாம் கூறும் விடயங்கள் உடனடியாகத் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் சென்றிருந்தோம். ஆனால், அது நடைபெறவில்லை. நாங்கள் கேட்ட விடயங்களுக்கான சரியான பதிலை அவர் தரவில்லை. சம்பிரதாயபூர்வமான ஒரு கூட்டமாகவே இது இடம்பெற்றது. பல அபிவிருத்திகள் அறிவிக்கப்பட்டாலும் கூட அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வில்லை.

இதேவேளை, ஜனாதிபதி வந்து சென்ற பின்னர் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இராணுவ முகாம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அது என்ன தேவைக்காக அமைக்கப்பட்டது என்ற விடயம் தெரியவில்லை. எமது மக்களை அச்சுறுத்துவதற்கான செயற்பாடே அது. ஏற்கனவே பொலிஸ் சோதனைச்சாவடி அங்கு இருக்கின்றது. இந்நிலையில், இராணுவத்தின் தேவை என்ன என்று புரியவில்லை. இது தொடர்பாக நாம் நாடாளுமன்றிலும் ஜனாதிபதியிடமும் பேசுவோம். இது அகற்றப்பட வேண்டிய முகாம். சிவில் நிர்வாகம் என்பது பொலிஸாரிடம்தான் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் வவுனியா வருகையின் போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது ஆதங்கத்தைப் போராட்டத்தின் மூலம் வெளிப்படுத்தினர். இதன் போது கைது நடவடிக்கை இடம் பெற்றிருந்தது. காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவர் கைது செய்யப்பட்டார். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். தமது உறவுகளைத் தேடி பல வருடங்களாகப் போராடி வரும் ஒருவரை ஜனாதிபதிக்கு எதிரான போராட்டமாகப் பார்க்காது அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது எங்களின் கோரிக்கை.

இது ஒரு தேர்தல் ஆண்டு. ஜனாதிபதித் தேர்தலா அல்லது நாடாளுமன்றத் தேர்தலா எனப் பேசப்பட்டு வருகின்றது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகப் பல ஊடகங்கள் பேசப்படு கின்றன. வடக்கு -கிழக்கில் எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத சூழலில் இந்தத் தேர்தலைக் கையாளும் விதம் தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும். அனைத்துக் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இணைந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக நாம் பரிசீலிக்க வேண்டும்.

எமது கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை நாம் உருவாக்க வேண்டுமானால் இந்த முயற்சியே பலனளிக்கும் என்று நான் நினைக்கின்றேன். அந்த ஒற்றுமை சாத்தியமா என்ற கேள்வி இருக்கின்றது. இதில் பல கட்சிகள் தங்களது கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். அதுபோல் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற தனது கருத்தைக் சொல்லியிருக்கின்றார். தமிழரசுக் கட்சி இன்னும் முடிவை அறிவிக்கவில்லை. இருந்தாலும் இடைமட்ட தலைவர்கள் பொதுவான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. சிவில் அமைப்புக்களுடனும், தேசிய கட்சிகளுட னும் பேசி ஒரு ஒற்றுமையான முடிவுக்கு வருவது சாலச்சிறந்ததாக இருக்கும். இந்த ஒற்றுமை சாத்தியமா என்ற கேள்வி இருந்தாலும், சிவில் அமைப்புக்கள். தமிழரசுக் கட்சி என்பவற்றுடன் பேச வேண்டியுள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியுடனும் பேசுவதற்கான முயற்சியை நாம் மேற்கொள்வோம். அந்தவகையில் முழுமையாக எடுக் கும் முடிவே சாத்தியமாகும். தென்னிலங்கை வேட்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஒரு நிபந்தனைக் குட்படுத்த வேண்டும்." - என்றார்.

## ஐ.நா. மீது தமிழர்கள் நம்பிக்கை இழப்பு

### இலங்கை அரசுக்கு எதிராக சரியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு



"ஐ.நா. மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து வரு கின்றார்கள். இலங்கை தொடர் பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் காட்டமாக இருந்தாலும் அவை தொடர்பில் இலங்கை அரசுக்கு எதிராக சரியான நிலைப்பாட்டை ஐ.நா. எடுக்கவில்லை."இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சாட்டினார்.வவுனியா வில் உள்ள ரெலோ அலு வலகத்தில் இன்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்ணதரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கை அரசால் கொண்டு வரப்பட வுள்ள புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் மோசமானதாகவே உள்ளது. அதன்மூலம் ஜனநாயகப் போராட்டங்கள் தடுக்கப்படும் நிலை காணப்படுகின்றது. பத்திரிகை சுதந்திரம் கட்டுப் படுத்தப்படும் சந்தர்ப்ப மும் உள்ளது. இதற்கு நாம் நாடாளுமன்றத்தில் எதிர்ப்பைக் காட்டுவோம். மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளில் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் எப்படிப் பாய்ந்தது என்று நாம் பார்த்தோம். போராட்டங்களை முன் னெடுக்கும்போதும் இந்தச்சட்டம் பயன்படுத் தப்பட்டுள்ளது. இந்தச்சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே ஐ.நா.மனித உரிமைகள் சபை யின் நிலைப்பாடாக உள்ளது. எனினும், இலங்கை அரசு அதை ஏமாற்றி வருகின்றது. ஐ.நா. மீதும் எமது மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றார்கள். இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் காட்டமாக இருந்தாலும் அவை தொடர்பில் இலங்கை அரசுக்கு எதிராக சரியான நிலைப்பாட்டை ஐ.நா. எடுக்கவில்லை. பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர் களைச் சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்பது எமது மக்களின் கோரிக்கையாகவுள்ளது. எனவே, புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எம்மால் ஏற்க முடியாது."என்றார்.

## விஜயகாந்துக்கு நேற்று எம்.கே.சிவாஜிலிங்கம் அஞ்சலி!



சென்னை. கோயம்பேட்டில் அமைந்துள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்திலுள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் கடந்த வாரம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழ்த் தேசியக்கட்சியின் பொது செயலாளருமான எம்.கே.சிவா ஜிலிங்கம் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதன் பின்னர் சாலிகிரா மத்தில் அமைந்துள்ள விஜயகாந்த வீட்டுக்குச்சென்று அவரின் திருவுருவப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

விஜயகாந்தின் மனைவியும் தே.மு.தி.க. கட்சியின் பொதுச் செயலருமாகிய பிரேமலதா மற்றும் அவரது இரண்டு புதல்வர்களுடன் தமது இரங்கல்களைப் பரிமாறிக்கொண்டதுடன் ஈழத் தமிழர்கள் சார்பில் இரங்கலையும் தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தலைவர் வே. பிரபாகரன் மீது தனது கணவர் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாகவே மகனுக்குப் பிரபாகரன் எனப் பெயர் வைத்தார் என உணர்ச்சிப்பெருக்கோடு குறிப்பிட்டார்.

ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுத்து தம்மைத் தாமே ஆளுகின்ற மக்களாக வாழவேண்டும் என்பதில்தனது கணவர் உறுதியாக இருந்தார் எனவும் தெரிவித்தார்.விஜயகாந்தின் எண்ணம். நோக்கம்.சிந்தனை ஆகியவற்றை மதிப்பதுடன் ஈழத் தமிழர்களின் நலனுக்காக அவர் விட்டுச்சென்ற பணியை நீங்கள் தொடர்ந்து செல்லவேண்டும் என அவரிடம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்

எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சண் மாஸ்டர் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.



அ. கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



**We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.**

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |








இப்பத்திரிகை 30.06.2023 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.